விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆனி 31 ஜூலை 7 இதழ் 154

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 15-7-1986


அரசுடனான பேச்சுக்கள்

## தீவிரவாதிகள் அங்கீகரிப்போ நிராகரிப்போ இல்லை!

கொழும்பு, செவ்

"அரசாங்கத்துடனான தமது பேச்சுவார்த்தைகளைத் தீவிரவாதிகள் அங்கீகரிக்கவோ, நிராகரிக்கவோ இல்லை" என்று தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

### 'ரூபவாஹினி'யில் அமிர்

நேற்று ரூபவாஹினிக்கு அளித்த விசேஷ பேட்டியொன்றிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசியல் தீர்வொன்றுக்கு பெரும்பான்மை மக்களின் உறுதியான ஆதரவும் அதே வேளை தீவிரவாதிகளின் ஆதரவும் கிடைக்கலாமெனதான் நம்புவதாகவும் திரு. அமிர்தலிங்கம் மேலும் தெரி

(5ம் பக்கம் பார்க்க)

வவனியா மாவட்டம்

# பாவற்குளத்தில் பதினொரு விவசாயிகள் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம், செவ்வாய்

வவனியா மாவட்டத்திலுள்ள பாவற்குளம் என்ற இடத்தில் ஒரு குடும்பம் உட்பட பதினொரு விவசாயக்குடிமக்கள் நேற்று முன்தினமிரவு சுட்டுக் கொல்லப்பட்டனர். இவர்களில் ஒன்பது பேர் ஆண்கள் இருவர் பெண்களாவர். 'கறுப்புடை' தரித்த பேர் வழிகளே இப்படுகொலைச் சம்பவத்தில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு வவனியா மாவட்டத்தில் பாவற்குளம் பகுதியிலுள்ள 10-வது யூனிட் பகுதியில் இப்படுகொலைச் சம்பவம் இடம்பெற்றது.

கொலையுண்ட பதினொருபரில் இருவர் சிங்கள இனத்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது

ஜீப் வண்டியொன்றில் திடீரென இந்த 10வது யூனிட் பகுதிக்கு வந்திறங்கிய கறுப்புடை தரித்த கோஷ்டியொன்றே இந்த அப்பாவி விவசாயிகள் மீது தமது கைவரிசையைக் காட்டியுள்ளது.

கொலையுண்டவர்கள் ஆயுதபடையினருக்கு அஞ்சி வேறு இடங்களில் இடம்பெயர்ந்திருந்தனராம் தமது விவசாயத் தொழிலில் ஈடுபடும் வகையில் அண்மையிலேயே இவர்கள் மீண்டும் பாவற்குளம் திரும்பியிருந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (மா)

வல்வெட்டித்துறையில்

## இராணுவம்சுட்டு விவசாயிபலி 'ஹெலி'யினால் வீடுகள்சேதம்

வல்வெட்டித்துறை, செவ்வாய்

வல்வெட்டித்துறை இராணுவ முகாமிலிருந்து நேற்று அதிகாலை 5 மணியளவில் வெளியே வந்த இராணுவத்தினர்மீது விடுதலைப்புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டனர்.

இராணுவம் முகாமிலிருந்து வெளியே வந்த சமயம், தோட்டமொன்றில்நீர்பாச்சிக் கொண்டிருந்த விவசாயியான இராசா [60 வயது] என்பவர் இராணுவத்தினரால் பிடரியில் சுடப்பட்டு மரணமானார். இதனையடுத்து சுமார் ஆறு மணித்தியாலங்கள் போராளிகளுக்கும், துருப்பினருக்குமிடையே கடும் மோதல் ஏற்பட்டது.

ஹெலிகாப்டரும் உதவிக்கு வந்து வல்வைப் பகுதியைச் சுற்றி சரமாரியாகச் சுட்டதில் இப்பகுதியில் பல வீடுகள் துளைக்கப்பட்டு சின்னாபின்னப் படுத்தப்பட்டுள்ளன.

சுமார் 75 யார் தூர இடைவெளியில் இருபகுதியினருக்குமிடையே இந்நேரடிமோதல் நடைபெற்றது.

முகாமிலிருந்து சிறிதுதூரம் தோட்டப்பகுதிவரை இராணுவத்தினர், புலிகளின் கடுமையான தாக்குதல்களால் தமது முகாமுக்குத் திரும்பிச் செல்வதில் தடுமாற்றமடைந்திருந்தனர்.

இராணுவ முகாமிலிருந்தும் மக்கள்வசிக்கும் இடங்கள் நோக்கி ஷெல்கள் அடிக்கப்பட்டன.

(8 ம் பக்கம் பார்க்க)

## இன்று மீண்டும் அனைத்து அரசியல்கட்சி மகாநாடு

### கூட்டணி பங்குபற்றுது

கொழும்பு, செவ்வாய்

இனப்பிரச்னைக்கு தீர்வொன்று காண்பதற்காக ஜனாதிபதி ஜயவர்த்தனாவினால் ஒழுங்கு செய்யப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகளின் மாநாடு மீண்டும் இன்றுகாலை பத்துமணிக்கு பண்டாரநாயக்கஞாபகார்த்த மண்டபத்தில் கூடும்.

இன்று ஆரம்பமாகும் இந்த மாநாடு எதிர்வரும் 18-ம் திகதி வெள்ளிக்கிழமை வரை நடைபெறும்.

கடந்தமாதம் இம்மாநாட்டில் பங்குபற்றிய அரசியல் கட்சிகளே இந்த மாநாட்டிலும் கலந்து கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை ஒவ்வொரு கட்சியிலிருந்தும் தலா 5 பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்து

(5ம் பக்கம் பார்க்க)

மன்னார் தாக்குதல்:

## 6 இராணுவத்தினர் உட்பட 24 பேர் பலி!

யாழ்ப்பாணம் செவ்

மன்னாரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் 24 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் 6 பேர் இராணுவத்தினர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன,

இச்சம்பவத்தில் கொல்லப்பட்ட 6 இராணுவத்தினர் தவிர்ந்த ஏனைய 18 பேரும் தமிழ் தீவிரவாதிகள் என

[5 ம் பக்கம் பார்க்க]

குண்டுவெடி பாதுகாப்பு:

## வவனியா பாடசாலைகளுக்கு கல்வி அமைச்சுசுற்றுநிருபம்!

பச்சிலைப்பள்ளி செவ்

வவனியா மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் குண்டுவெடிப்பிலிருந்து தப்புவதற்கான பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி கல்வி அமைச்சு சுற்றுநிருபம் மூலம் கோரியுள்ளது,

முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக அதிபர், ஆசிரியர்கள், மாணவத்தலைவர்கள், ஊழியர்களைக் கொண்ட பாதுகாப்புக் குழுக்களை அமைக்கும்படி அதிபர்கள் அச்சுற்று நிருபம் மூலம் கோரப்பட்டுள்ளார்கள்.

வாகன அனுமதிப்பத்திரமுறை:

## போக்குவரத்து சங்கங்கள் நாளை ஹர்த்தால், ஊர்வலம்

யாழ்ப்பாணம், செவ்.

கொழும்பு செல்லும் வாகனங்கள் பலாலி இராணுவ முகாமில் அனுமதிப்பத்திரம் பெறவேண்டும் என்ற அரசின் உத்தரவைக் கண்டித்து நாளை புதன்கிழமை பூரண ஹர்த்தாலும் ஆர்ப்பாட்டப்பேரணியும் நடத்தப்படவிருக்கின்றது.

வடபிராந்திய லொறிப் போக்குவரத்துச் சங்கமும். யாழ். முஸ்லிம் போக்குவரத்து ஒன்றியமும்விடுத்துள்ள பூரண ஹர்த்தால் சம்பந்தமான துண்டுப்பிரசுரத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

எவ்வித பாதுகாப்பும் அற்ற நிலையில் நாங்கள் இராணுவ முகாம்களுக்கு சென்று அனுமதிச்சீட்டை பெற ஆயத்தமாக இல்லை என்பதை அரசாங்கத்திடம் தெரியப்படுத்தும் முகமாக 16-7-86 புதன்கிழமை நாளை காலை 8-30 மணிக்கு கோப்பாய் கந்தசாமி கோவிலில்இருந்துஆர்ப்பாட்ட ஊர்வலம் ஆரம்பமாகும்.

இவ் ஊர்வலத்தில் சகல பொதுமக்களும் கலந்துகொண்டும் பாடசாலைகள், பல்கலைக் கழகத்தை பகிஷ்கரித்தும், வர்த்தகர்கள் கடைகளை அடைத்தும், தொழிற்சங்கங்கள் தொழிற்சாலைகளைப் பூட்டியும் ஆதரவளிக்கும்படி தயவாகக்கேட்டுக்கொள்கின்றோம். (வா)

## திருமலையில் ஊரடங்குச்சட்டம் மீண்டும் அமுல்

கொழும்பு, செவ்

திருமலை மாவட்டத்தில் மீண்டும் ஊரடங்குச் சட்டம் அமுல்செய்யப்பட்டுள்ளது'

நேற்றிரவு 7 மணிக்கு அமுலுக்கு கொண்டுவரப்பட்ட ஊரடங்குச் சட்டம் இன்று காலை 5 மணிக்கு நீக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## தொலை தொடர்பு ஊழியரை பண்ணை அலுவலகம் வர பணிப்பு

யாழ்ப்பாணம், செவ்

யாழ். தொலை பேசி நிலையத்தில் கடமைபுரியும் 250 ஊழியர்களையும் பண்ணையிலுள்ள தொலைபேசி நிலையத்தில் வந்து கடமைபுரியும்படி மேலிடம் பணித்துள்ளதாகதெரிகிறது.

16ம் திகதி புதன்கிழமை சகல ஊழியர்களும் பண்ணையில் உள்ள தொலைபேசி நிலையத்தில் வந்து கடமையாற்றும்படி கேட்கப்பட்டுள்ளனராம். (ஐ)

அரசு சிங்களத்தில் கடிதம்

## வெலிக்கடை தமிழ் இளைஞர் ஏற்க மறுப்பு!

யாழ்ப்பாணம், செவ்

வெலிக்கடைச் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அரசாங்கத்துக்கு கடிதமூலம் அறிவித்திருந்த தமிழ் இளைஞர்களுக்கு தனிச் சிங்களத்தில் அரசாங்கம் பதில் அனுப்பியுள்ளதாகவும் அதனை தமிழ் இளைஞர்கள் ஏற்கமறுத்துள்ளதாகவும் தெரியவருகிறது. தமிழ் இளைஞர்கள் தமக்குரிய பதிலை தமிழில் தருமாறு கோரியுள்ளனராம்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் உள்ள தமிழ் இளைஞர்கள் தம்மை விசாரணைக்குட்படுத்தி நீதிமன்றம் கொண்டு செல்லுபபடி கேட்டு அதற்கான பதிலையே எதிர்பார்க்கின்றனர். திருப்தியான பதில் கிடைக்காத பட்சத்தில் மிக விரைவில் உண்ணாவிரதம் மேற்கொள்ளப்படும் எனவும் கூறப்படுகிறது. [ஐ]

## வரி விளம்பரம்

### தேவை

யாழ். நகரில் வளர்ந்துவரும் ஒரு ஹோட்டலுக்கு Stewards—Cooks தேவை. அனுபவ சான்றிதழ்களுடன் நேரில் வருக. Old Park Chinese Restaurant 207, Old Park Road, Jaffna. C 3470

புதிய நாஷனல் வாஷிங் மெஷின் NA1800 மாற்றுக தையல் மெஷின் அல்லது வீடியோ டெக், அல்லது மோட்டார் சைக்கிள் என்பன தேவை. தொடர்பு: வண்ணை, ஏஜென்சி, 41, பிரப்பங்குளம் வீதி, அல்லது 302/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [C-3477]

### விற்பனைக்கு

சங்கானையில் 21½ நிலப் பரப்பு பனங்காணி, யாழ் நகர எல்லைக்குள் K. K S. வீதியிலிருந்து 50யார் தூரத்தில் 3 கடைகள் களஞ்சிய அறைகளுடனும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- வண்ணை ஏஜென்சி, 41. பிரப்பங்குளம் ரோட், வண்ணார்பண்ணை வீதி, யாழ்ப்பாணம். அல்லது 301/1 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [C-3478]

கூந்தலழகு மிளிர நாலு இயற்கை பொருட்களான சீயாக்காய், பச்சையரிசி, பயறு, வெந்தயம், சேர்ந்த 'சீயாக்காய் பவுடர்' மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. M. G M 777, K K S Road and 208. 1st Cross St, Jaffna T P. 22611. [C-3399]

சாவகச்சேரி பருத்தித்துறை ரோட்டில் சரசாலையில் 6பரப்பு அல்லது 9பரப்பு வீடுகட்டக் கூடியகாணி விற்பனைக்குண்டு. தொடர்பு: விளம்பர இல C-3479, C/o ஈழநாடு யாழ்ப்பாணம். [C-3479]

### தவறிவிட்டது

மாணிக்கவாசகர் சண்முகநாதன் என்பவருடைய 017279 இலக்கமுடையலைசென்சும் 571452049 V இலக்கமுடைய அடையாளஅட்டையும் கே.கே.எஸ்.மயிலிட்டிவீதிஅல்லது கோப்பாய் மருதனுமடம் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் பின்வரும் விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். கே. அன்னம்மா, 54/4, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். C 3481

முற்றிலும் தன்னியக்க இயந்திரங்கள் மூலம் தயாரானது




★ தெய்வீகமானது
★ உருகாது
★ கருகாது
★ நெடுநேரம் எரியக்கூடியது
★ பிரகாசமானது

(A-768)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


# யாழ். வெங்காயத்தை கப்பல் மூலம் கொழும்புக்கு அனுப்ப கோரிக்கை

## யாழ். அரச அதிபருக்கு அமைச்சு செயலாளர் கடிதம்

(பண்டத்தரிப்பு)

யாழ் மாவட்ட விவசாயிகள் உற்பத்திசெய்யும் வெங்காயத்தை கப்பல் மார்க்கமாக கொழும்புக்கு ஏற்றுமதி செய்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு விவசாய ஆராய்ச்சி அமைச்சின் செயலாளர் யாழ் மாவட்ட அரசாங்க அதிபரை கடிதமூலம் கேட்டுள்ளார்.

யாழ் மாவட்டத்தில் உற்பத்தியாகும் வெங்காயத்தை கொண்டுவருவதில் பலத்த சஷ்டங்கள் இருப்பதாக விவசாய ஆராய்ச்சி அமைச்சு அறிய வந்துள்ளதாகவும் இந்த வெங்காயத்தை சந்தைப் படுத்துவதற்கு வசதியாக கூட்டுறவு மொத்த வியாபாரநிறுவனத்துடன் தொடர்பு கொண்டு விலை விபரங்களை அறிந்து கப்பல் மூலமாக அனுப்புவதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறும் இக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகின்றது. விவசாய ஆராய்ச்சி அமைச்சின் செயலாளர் திரு வேரகொடவினல் அனுப்பி வைக்கப்பட்ட இக்கடிதத்தின் பிரதி யாழ் விவசாய திணைக்களத்திற்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## இனப்பிரச்னை பற்றிய பேச்சுக்களில்

# கலந்துகொள்வதில்லையென சுதந்திரக்கட்சி அறிவிப்பு

கொழும்பு. திங்கள்.

''தமிழர் பிரதிநிதிகள் உள்ளடக்கிய அரசு தரப்புக் கூட்டத்தில் தாம் கலந்து கொள்ளப்போவதில்லை'' என்று சிறீலங்கா சுதந்திரக் கட்கி தெரிவித்துள்ளது

பிரதான எதிர்க்கட்சியான சுதந்திரக்கட்சியின் செயற்குழுக்கூட்டம் நேற்று முன் தினம் நடைபெற்றது. அப்பொழுதே மேற்படி கட்சி இவ்வாறு தெரிவித்துள்ளது

இனப்பிரச்னை தீர்வு குறித்து அரசியல் கட்சிகளின் மாநாடு இலங்கை அரசு தெரிவித்த யோசனைகளுக்கும், இந்திய அரசின் மூலம் தமிழக பிரதிநிதிகளுக்கு அளித்துள்ள யோசனைகளுக்கும் இடையில் நிறைய முரண்பாடு இருப்பதாகவும் தாம் இப்பேச்சுவார்த்தைகளை நிராகரிப்பதாகவும் தெரிவித்துள்ளது. [ரா)


## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

### திரு. ஆ. க. கணபதிப்பிள்ளை

(முன்னாள்பருத்தித்துறை செல்வம் ஸ்ரோர்ஸ் உரிமையாளரும், தற்போதைய யாழ். ராஜி ஸ்ரோர்ஸ் கணக்காளர்)

மலர்வு:- 20-07-1919

உதிர்வு:- 16-06-1986

எங்கள் குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், இறுதிச்சடங்கு ஒழுங்குகளில் உதவியவர்களுக்கும் எங்கள் இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் [நாளை] 16-07-86 புதன்கிழமை காலை 6-00 மணிக்கு வீட்டில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், அன்பர்கள், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

இங்ஙனம்:
மனைவி, பிள்ளைகள்.

'புவனேஸ்வரி வாசா'
புதுக்கலட்டி,
அல்வாய் தெற்கு.
அல்வாய். [C-3426]


## பட்டமளிப்பும் பாராட்டு விழாவும்

சாவகச்சேரி, திங்கள்

பேராசிரியர் கு. நேசையாவின் பட்டமளிப்பும் பாராட்டு விழாவும் எதிர்வரும் 19ம் திகதி சனிக்கிழமை பல்கலைக் கழக கைலாசபதிகலையரங்கில் நடைபெறவுள்ளது.

அறவழிப் போராட்டக் குழுவினுல் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள இவ் விழாவின் போது யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் பேராசிரியர் நேசையாவைப் பாராட்டி பட்டமளித்துக் கௌரவிப்பார்.

## மீனவர் கொலை விசாரணை நடைபெறுகிறது

கொழும்பு, திங்கள்.

ஒன்பது இந்திய மீனவர்கள் அண்மையில் இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் பற்றி பூரண விசாரணையொன்று நடத்தப் படுகிறது. என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது

இச் சம்பவம் பற்றி இந்தியத் தூதுவர் இலங்கை அரசிடம் புகார் செய்திருந்தமை தெரிந்ததே

## குடியேற்றங்களில் முருங்கைஉற்பத்தி அதிகரிக்க...

யாழ்ப்பாணம், செவ்வாய்

குடியேற்றப் பகுதிகளில் முருங்கை உற்பத்தி பெருமளவில் தேவைப்படுவதாகவும் முருங்கைத்தடிகளை யாரும் இலவசமாகக் கொடுத்துதவினுல் அவற்றைக் குடியேற்றப்பகுதிகளுக்கு எடுத்துச் சென்று விநியோகிப்பதற்கு தயாராகவுள்ளதாகவும் முருங்கைத் தடிகள் வழங்குவதற்கு விருப்பமுடையவர்கள் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு மில்க்வைற் தொழிலதிபர் திரு. க. கனகராசாவேண்டுகோள் விடுக்கிறார்.

## உதவி அரச அதிபர் இடமாற்றம்

பண்டத்தரிப்பு, திங்கள்

வேலணை உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய செல்வி சாந்தி சுப்பிரமணியம் இம்மாதம் தொடக்கம் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்,

## பாகிஸ்தான் தலைபீடு பற்றிய———

# வெள்ளை அறிக்கையை வெளியிடுமாறு வாஜ்பாய் வற்புறுத்தல்

சண்டிகார், ஜூலை 14

பஞ்சாப் பிரச்னையில் பாகிஸ்தான் தலையீடுகுறித்த வெள்ளை அறிக்கையை மத்திய அரசு உடனடியாக வெளியிட வேண்டுமென பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர் திரு. அடல்பிஹாரி வாஜ்பாய் வற்புறுத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் ஜலந்தரில் செய்தியாளர் மத்தியில் பேசும்போது இதனைக் கூறிய அவர் இந்த விடயம் குறித்து பாகிஸ்தானுடன் இந்தியா உடனடி பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவேண்டுமென்றும் கூறியுள்ளார்.

இதேவேளை இந்திய எல்லை பந்தோபஸ்துப் படையினரும் பொலிஸாரும் பஞ்சாப்பின் நாற்பது தீவிரவாத சந்தேக நபர்களை கைதுசெய்துள்ளனர். இவர்களில் மூவர் விசாரணையின் பின்பு விடுதலைசெய்யப் பட்டபோதும் ஏனையோர் பயங்கரவாதச் செயலில் ஈடுபட்ட குற்றத்தின்பேரில் விசாரணைசெய்யப்பட்டுவருவதாக கூறப்பட்டது. [ரா]


## கொப்பரு தேவை

வாங்குமிடம்:

சோதி ஸ்ரோஸ்

கோண்டாவில் சந்தி.

[A-791]

## DIABETIC BREAD

Now Available, Early orders Adviced

Pedrupillais Premier Bakery,
73, Main Street, Jaffna.

T. P. 22644 Estd;1865

தவிட்டுப்பாண் இன்று முதல் விற்பனையாகும்.
முன் ஓடர் ஏற்றுக்கொள்ளப்படும்.

(C 3459)

## வெளிவந்துவிட்டது!

"கேள்வி நெகிழ்ச்சி, நிரம்பல் நெகிழ்ச்சி"
பற்றிய தத்துவங்கள்
இரண்டாவது பதிப்பு
ந. பேரின்பநாதன், M. A.
[விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்]
(G. C E. (A/L)மாணவர்களுக்கான வினுவிடையும் இலவசமாக இணைக்கப்பட்டுள்ளது.)
விலை ரூபா 12/00.
வெளியீடு:
பட்டப்படிப்புகள் கல்லூரி,
148, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[C-3480]


## ஆகாயக் கண்காணிப்பு தீவிரம்

வசாவிளான், திங்கள்.

பலாலி விமான நிலையத்தை அண்டியுள்ள பகுதிகளான வசாவிளான், குரும்பசிட்டி, ஏழாலை. குப்பிளான் ஆகிய கிராமங்கள் மீது ஆகாய கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரமாகியுள்ளன.

விமானங்கள் பலாலி விமான நிலையத்தில் தரையிறங்கும் வேளைகளிலும், புறப்படும் வேளைகளில் இக் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படுகின்றன, புதிய ரக ஹெலிகொப்டர்கள் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதனையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது சில வேளைகளில் 'ஹெலி,யிலிருந்து வேட்டுக்களும் தீர்க்கப்படுகின்றது.

## பல்கலைக்கழக மாணவரின் பெயர்ப்பட்டியல்

வயாவிளான், திங்கள்

86—87 ஆம் கல்வி ஆண்டில் இலங்கையிலுள்ள பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள தமிழ் மாணவரினது பெயர்ப்பட்டியல் யாழ். பல்கலைக்கழகத்துக்கு பல்கலைக் கழக மானிய குழுவினுல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

உரிய புள்ளிகளை எடுத்தும் இப்பட்டியலில் தமது பெயர் இல்லாத விடத்து, சம்பந்தப்பட்ட மாணவர் பல்கலைக் கழக மானியக் குழுவினருடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ் பல்கலைக்கழக பதிவாளர் தெரிவித்துள்ளார்.

## தென்னுபிரிக்காவுக்கெதிரான பொருளாதாரத்தடை

# வெள்ளையரல்லாதோரையே அதிகம் பாதிக்குமாம்

### பிரி. பிரதமர் மீண்டும் வலியுறுத்துகிருர்

வன்கூவர், ஜூலை. 14

"தென்னு பிரிக்காவுக்கு எதிரான பொருளாதாரத் தடையானது, அந்நாட்டில் வாழும் வெள்ளையரல்லாதோர் மத்தியில் வேலைவாய்ப்பின்மையையும், ஏழ்மை நிலையினையும் அதிகரிக்கச் செய்யும்" என்று பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தாட்சர் மீண்டும் கூறியுள்ளார்.

தென்னுபிரிக்காவுக்கு எதிரான பொருளாதாரத் தடையை எதிர்க்கும் தமது நிலை குறித்து வன்கூவரில் நிருபர்களுககு அளித்த பேட்டியொன்றிலேயே திருமதி தாட்சர் இவ்வாறு நியாயப்படுத்துயுள்ளார்.

**காமன்வெல்த் பாதிக்கப்படும்**

இதேவேளை "தென்னுபிரிக்காவுக்கு எதிரான பொருளாதாரத் தடையை பிரிட்டன் தொடர்ந்துநிராகரிக்குமாளுல் காமன்வெல்த் அமைப்பு எதிர்காலத்தில் பெரும்ஆபத்தை எதிர்நோக்கும்" என்று ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் திரு. டெல் ஏடன் எச்சரிக்கையொன்றை விடுத்துள்ளார்.

ஆபிரிக்க நாடுகள் அனைத்தும் காமன்வெல்த்திலிருந்து விலகும் நிலை ஏற்படுமாளுல் அந்த அமைப்பு வெகுவாகப் பாதிக்குமென்றும் திரு. ஏடன் கூறியுள்ளார். (ரா)



## ராஜீவ் - எர்ஷாத் புதுடில்லியில் சந்திப்பர்

புதுடில்லி, ஜூலை. 14

பங்களாதேஷ் அதிபர் லெப்டினனட் ஜெனரல் எர்ஷாத் இன்று புதுடில்லி வந்து சேருவார். உத்தியோகரீதியான பயணத்தை மேற்கொண்டு வரும் அதிபர் மூன்றுதினங்கள் தங்குயிருப்பார்.

அதிபர் எர்ஷாத் புதுடில்லியில் தங்கியிருக்கும்பொழுது பிரதமர் ராஜீவ் காந்தியுடன்

(7ம் பக்கம் பார்க்க)

## ஒருவழிப்பாதை

வவனியா, திங்கள்

வவனியாவிலுள்ள முக்கிய வீதிகளை ஒரு வழிப்பாதையாகமாற்றுவதற்கு வவனியா பொலிசார் ஆராய்ந்து வருகின்றனர்.

ஒருவழிப்பாதை மாற்றம் சம்மந்தமாக விரைவில் பொது மக்களுக்கு அறிவிக்கப்படும்.

## அஹமதாபாத்தில் தொடரும் வன்முறை ராணுவம் உஷார் நிலையில்

அஹமதாபாத், ஜூலை.14

அஹமதாபாத்தில் ஆரம்பித்த வன்செயல்களைத் தொடர்ந்து அங்கு பெரும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. இராணுவம் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. நிலைமை மோசமடையும் பட்சத்தில் களத்துக்குஇராணுவம் அழைக்கப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

அங்கு நேற்றுமுன் தினம் இடம்பெற்ற வன்முறைகளின் போது இருவர் கொல்லப்பட்டனர். இதுவரை மொத்தமாக கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை பதினுருக உயர்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இதேவேளை முதலமைச்சர் திரு. அமர்த்தஷிங் நிலைமையைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர சகமுயர்சிகளையும் மேற்கொண்டு வருவதாக கூறப்படுகிறது. நகரில் பொலிஸ் பாதுகாப்பு பரவலாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ரா)

## இலவச பால் விநியோகம்

கிளிநொச்சி, திங்கள்.

கிளிநொச்சியில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைத் தொடர்ந்து பனித முன்னேற்ற நிலையத்தின்பால் பண்ணையில் இருந்து பெறப்படும் பால் இப்பகுதி மக்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. பனித முன்னேற்ற இயக்க உத்தியோகத்தர் த. கணேசப்பிள்ளை இதற்கான நடவடிக்கைகளை எடுத்திருந்தார்.

## நெல்லியடி 'பொது நூலகத்தை வழமைபோல திறக்கவும்'

சரவெட்டி, திங்கள்.

நெல்லியடி பிரதேச அபிவிருத்திசபையின் அதிகாரத்திற்குட்பட்ட பொது நூல் நிலையத்தை மறுபடியும் வழமைபோலக் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை திறக்கும்படியும் முக்கியமாகச் சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில் வாசகர்களின் நலன் கருதித் திறந்து வைக்கும்படியும் கோரும் மகஜரொன்றை விசேஷ ஆணையாளரிடம் கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக் கலாசாரப் பெருமன்றம் அனுப்பி வைத்துள்ளது.

இது சம்பந்தமாக உரிய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவென மூவர் கொண்ட பிரதிநிதிகள் குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## வாத்தியக் கருவிகள்

சாவகச்சேரி, திங்கள்

சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு பாண்ட் வாத்தியக் கருவிகள் மிகவிரைவில் கிடைக்கவுள்ளன. இதற்கான விண்ணப்பத்தினை கல்லூரி அதிபர் யாழ். கல்வித்திணைக்களத்துக்கு அனுப்பிவைத்துள்ளார்.

Lipton

லிப்டன் லாவோஜி பிரியர்களுக்கோர் நற்செய்தி

புதிய குறைந்த விலையில், அதி நிறைந்த சுவையுடன் "லிப்டன்" வாசகம் பொறிக்கப்பட்ட அலுமினியம் சுற்றுத்தாளில் அடைக்கப்பட்டு புதிய பொலிவுடன் "லாவோஜி" தேயிலைப் பக்கட்கள் இப்பொழுது எங்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

போலி லிப்டன் லாவோஜி பக்கெட்டுகள் விற்பனைக்கு விடப்பட்டுள்ளதனுல் லாவோஜி தேயிலை வாங்கும்போது, மேற்கூறப்பட்ட முக்கிய அம்சங்களை அவதானித்து அசல் லாவோஜியை உங்கள் மொத்த, சில்லறை, வியாபாரிகளிடம் பெற்றுக் கொள்ளுங்கள்.




புதிய விலை: ரூபா 3/60 (50 கிரும்)

லிப்டன் சிலோன் லிமிட்டெட், த. பெ. எண் 86, கொழும்பு.

லிப்டன் லவோஜி
அதி சிறந்த தேயிலைத் தூள்

A 493

**மணிவாக்கு**

மனிதர் தேயிலைக்குச் சமம்; அவர்களின் உண்மையான பலம் சுடுதண்ணீரில் போட்டால்தான் தெரிய வரும்.

— ஒரு அறிஞர்.

## நமதுநோக்கு

# கயிறு விடாதீர்கள்; கயிற்றைக் கைவிடுங்கள்!

“பழிக்கே சுழன்று வெம்பாவங்களே செய்து பாழ் நரகக் குழிக்கே யழுந்துங் கயவர் தம்மோடென்ன கூட்டினியே” என்ற அபிராமிப்பட்டரின் பிரலாபம் இன்று இந்நாட்டில் வாழும் தமிழ் மக்களைப் பிடித்திருப்பது உண்மை என்பதை உலக மனச்சான்று ஒத்துக்கொள்ள வேண்டியது.

1958ம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரத்தை கண்டித்து ஒரு அரிய நூலை வெளியிட்டவர் இன்று சர்வதேசப்புகழ்பெற்ற பத்திரிகையாளர், இலங்கைப் பெருமகன் ராஸி வித்தாச்சி. எது வந்தாலும் உண்மையை உறுதியாகக் கொண்டதன் பயனுல் பத்திரிகைப் பெரும் பதவியைத் துறந்து நாட்டைவிட்டு வெளியேறும் பாக்கியம் அவருக்குக் கிடைத்தது.

கயவர் கூட்டத்துக்கு என்றும் அஞ்சாத இப்பெருமகன் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியின் தலைமை ஆசியர் (அதிபர் அல்ல) எஸ். பீ. பெரேராவின் மகனுவார். அக்கல்லூரியில் “பயின்ற காலத்திலேயே நாட்டுப்பற்றென்ற உயர் பண்பு, குறிப்பாக சிங்கள—தமிழ் நட்பில் உறுதிகொண்டது. பத்திரிகைக் கெழுதும் பழக்கமும் அந்நாட்களிலே கைவரப்பெற்றது.

இளைஞரின் இயல்பைத் தம்மிலே பரீட்சித்துப் பார்க்கும் ராஸி வித்தாச்சி மூத்தோரின் குறிப்பாக அதிகாரிகளின் அடக்குமுறையை அஞ்சாநெஞ்சத்துடன் எதிர்த்துப் போராடிய பத்திரிகைப் புலி. ஆனல் பெரியோரிணக்கத்தைப் பலியிடவில்லை.

இன்று தம்முடைய பழைய கல்லூரி மட்டுமல்ல தமது பட்டப் படிப்புக்கு உதவிய கொழும்பு பல்கலைக்கழகமும் (அக்காலத்தில் இலங்கைப் பல்கலைக்கழகம்) அவரைக் கௌரவித்திருக்கிறது. கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு எமது பாராட்டு.

இலக்கிய கலாநிதி என்ற பெருமதிப்புடைய சௌரவ பட்டத்தை, பத்திரிகைச் சேவையில் சிறந்தவரென்பதால் முதலில் பெற்றவர் இப்பெருந்தகையே. பத்திரிகைப் பத்தாவுக்கு ஏற்ற பதிவிரதை இவர் என்று உருவகப்படுத்தல் எவ்வகையிலும் மிகையாகாது.

அண்மையில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் அவர் நிகழ்த்திய பேருரை சிந்தனைக்கு விருந்தென்பது வெளிப்படை; ஆனல்இன்று விருந்துண்பது பொருந்தாத செயல்; வேதனையுடன் அவர் பேசியதைக் குறிப்பிடுகையில் பத்திரிகா தர்மம் எத்தகையது என்பதை ஒரு அனுபூதிமானென்ற காரணத்தால் நாம் உன்னிப்பாகக் கவனிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

சுதந்திர இலங்கைஉலகுக்கொரு எடுத்துக்காட்டாக வரவிருக்கிறதென்ற எதிர்பார்ப்பை முதல் பத்துவருடங்களில் கவிழ்த்துவிட்டோமேஎன்றசந்தேகத்தை பேச்சில் முன்வைத்திருக்கிறுர்

தம்மைப்போன்றசிங்கள, தமிழ் மாணவருக்கு வழிகாட்டிய பல்கலைக்கழகப் பேராசிரியர்களைமதிப்புடன் நினைவு கூர்ந்த ராஸி ஆங்கிலப் பேராசான் லின்லுடோவைக் என்பவரையும், கணிதப் பேராசிரியர் சுந்தரலிங்கத்தையும் குறிப்பாகச்சுட்டியிருக்கிறுர்பத்திரிகையாளனுக்கு இன்றியமையாத பண்புகளுக்கு வழிகாட்டியவர்களென்பதே காரணம். “சொற்களைக் கையாளும்போது கருத்தை மழுப்பும் அலங்காரம் வேண்டாம்” என்பது ஆங்கிலப் பேராசானின் தாரகமந்திரம்; “எந்த ஒரு சிறு காரியத்திலும் தவறு ஏற்படக்கூடாது, உலகனைத்தும் ஒரு பக்கம் நின்றுலும், அது தவறென்றுல் தனித்து நிற்கும் மனேபலம்என்றும் வேண்டப்படுவது” என்பது கணிதப் பேராசிரியர் அளித்த பயிற்சி.

இவ்வித நினைவுகளைச் சபைக்குமுன் பரிமாறிய பெருந்தகை ராஸி வித்தாச்சி இன்று பல்கலைக்கழகம் அரசின் ஆணைக்குட்பட்டதையும், பத்திரிகைகளின் சுதந்திரம் பறிக்கப்பட்டிருப்பதையும்அறியாதவரல்லர். ஆட்சியதிகாரம் என்ற பாசக்கயிறு இலகுவில்கைவிடப்படும் பண்டமல்ல.

எந்த ஆட்சியையும், அது கள்வர் கூட்டமென்றுல், கிழித்தெறியத் தயங்காத பத்திரிகை முதல்வர். பத்திரிகை சுதந்திரம் பறிக்கப்படுவதாலேயே இந்நாட்டுக்கு இன்று வெளியுலகில் அவப்பெயர் கிடைத்திருக்கிறதென்றுர்.

உண்மையை மறைப்பதாலேயே வெளிநாட்டு நிருபர்கள் இங்கு குவிகின்றனர்; அவர்களின் அறிக்கைகள் ஆவலுடன் படிக்கப்படுகின்றன. ஒளித்தல் மறைத்தல் நாட்டில் எழுந்திருக்கும் அரசியல் சிக்கல்களை பன்மடங்கு பெருக்குவதோடு நாட்டின் பிரதான அங்கமான பத்திரிகைத் துறையின் மதிப்பை பன்மடங்கு தாழ்த்திவருகிறதென்றுர்.

உண்மையான தேசப்பற்றுடையவர்; ஒருநல்லாசானின் நன்மகன், உண்மைத்தேசியவாதி என்பதால் இன்றைய கொந்தளிப்புகளும் கொடுமைகளும் விரைவில் அடங்குமென்று நம்புகிறுர். இரு சமூகங்களும் நாட்டின் இரு கண்களாகத் திகழும் என்ற கனவை இன்றும் கைவிடவில்லை.

இதற்கு யார் ஆட்சேபம் எழுப்பத் துணிவார்?

அவர் இட்ட நிபந்தனை அக்கனவுக்கு பலம் அளிக்கின்றது. “ஆட்சியில்அமர்ந்திருக்கும் தலைவர்கள் உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாகவேண்டும் அது மக்களின் - சாதாரண மக்களின் உள்ளக்கிடக்கையைப் பிரதிபலிக்கவேண்டும்” கடினமான நிபந்தனை இது.

எழுத்தறியாத பாமர மக்களை ஏமாற்றுவது அசாத்தியமென்பதை இன்றுவது ஆட்சிக்குப் போட்டி போடும் அரசியல் கட்சிகள் உணரவேண்டும்.

ஒன்றுபட்ட இலங்கைக்கு உழைத்த பெரியோர்களில் பேராசிரியர் சுந்தரலிங்கம் முன்னணியில் நின்றவர். பின்பு அடங்காத்தமிழனுக மாறியதும், இறக்கும் போது தமிழரின் எதிர்காலம் இன்று போராடும் இளைஞர்களில் தங்கியிருக்கிறதென்றதும் மேலே குறிப்பிடப்பட்ட உண்மைக்குச் சான்ருகும்.

# தமிழ் மக்களின் தீர்ப்பை மாற்ற எவருக்கும் அதிகாரம் இல்லை——

# மாகாணசபை யோசனை; தமிழ்க் காங்கிரஸ் நிராகரிப்பு

யாழ்ப்பாணம், செவ்.

‘தங்கள் பாரம்பரிய தாயகத்தின் சுதந்திரத்தினை நிலைநாட்டுவது என்று ஏற்கனவே தமிழ் மக்கள் தேர்தல் மூலம் தீர்ப்பினைத் தந்திருப்பதோடு அதற்கான ஆணையையும் பிறப்பித்திருககிருர்கள் எனவே அவர்களின் ஆணையைமீறவோ சர்வஜன வாக்கெடுப்பு என்று கூறப்பட்ட தேர்தலில் அளித்த தீர்ப்புக்கு மாருக அரசியல் அமைப்பை ஏற்றுத் திருத்தங்கள் தொடர்பாக ஆலோசனை கூறவோ, தமிழ் தேசிய இனத்தை சேர்ந்த எமக்கோ, வேறெவருக்குமோ, அல்லது அமைப்புகளுக்கோ அதிகாரம் இல்லை என்பதே எமது நிலையாகும். தமிழ் காங்கிரஸ் தனது சுதந்திர லட்சியத்தில் நம்பிக்கை வைத்து அரசாங்கத்தின் மாகாணசபை ஆலோசனையை இணக்கத்திற்கான தீர்வாக ஏற்றுக் கொள்ளாது நிராகரிக்கின்றது.

தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம், இன்று நடைபெறும் அரசியல் கட்சி மாநாட்டில் சமர்ப்பிக்கவிருக்கும் அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

தமிழ் தேசிய இனம் சுதந்திரமாகவும், சுயமரியாதையுடனும், சுபீட்சமாகவும் வாழவேண்டுமென்ற எங்கள் கட்சியின் லட்சியத்தை அரசியல் கட்சி மாநாட்டில் அரசாங்கத்தினுல் சமர்ப்பிக்கப்பட்ட மாகாணசபை பற்றிய திட்டமானது எவ்வகையிலும் நிறைவு செய்யவில்லை.

தமிழ் தேசிய இனத்தின் சுதந்திர கோரிக்கையைப் பலவீனப்படுத்தவே மாகாணசபை பற்றிய திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளதாக கருதுகிறேம்.

அரச பயங்கரவாதமானது தமிழர்களின் பாரம்பரிய பிரதேசத்தில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது நிராயுதபாணிகளான குடிமக்களுக்கு எதிராக குண்டுவீச்சு விமானங்கள் தொடர்ந்தும் குண்டுகளைப் பொழிகின்றன. குழந்தைகள், வயோதிபர்கள், இளைஞர்கள், தாய்மார்கள், மதகுருமார்கள் என்ற வேறுபாடில்லாது தமிழர்கள் நாளாந்தம் பலியாகின்றனர். கொலை, கொள்ளை, தீவைப்பு ஆகிய கொடுமைகள் தென்னபிரிக்காவில் நடைபெறுவது போல் இங்கும் தொடர்கின்றன. வெளிநாட்டுக் கூலிப்படையினரும், ஊர்காவல் படையினரும், ஆயுதப்படையினரும் தமிழின ஒழிப்பு வேலைகளைத் தொடர்ந்து செய்ய அனுமதித்திருக்கும் அரசாங்கம் அந்தரங்க சுத்தியோடுதான் இனப்பிரச்னைகளுக்குத் தீர்வுகாண முயல்கின்றது என்பதை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாமல் உள்ளது இதனுல்தான் மாகாணசபைத் திட்டத்தையிட்டு நாம் பெரிதும் சந்தேகம் கொள்ளுகிறேம்.

### பிரித்தானியாவை பின்பற்றி

காலனித்துவ நாடுகளில் தமது அதிகாரத்தைத் தொடர்ந்து வைத்திருப்பதற்காக அற்ப அரசியல் அதிகாரங்களை காலத்திற்குக் காலம் வழங்கி அவை பூரண சுதந்திரநாடுகளாக உருவாவதைக் காலதாமதப்படுத்தி வந்தனர் பிரித்தானியர். உளுத்துப் போன இந்த தந்திரோபாயத்தைப் பின்பற்றி மாகாணசபை யோசனை எம்முன் வைக்கப்பட்டுள்ளது. பாரம்பரிய தமிழ்ப் பிரதேசங்கள் திட்டமிட்ட அரச சிங்களக் குடியேற்றங்களின் மூலம் பறிக்கப்பட்டமை. தமிழருக்கும் சிங்களமேஆட்சி மொழியாக்கப்பட்டமை உயர்கல்வி பெறுவதில் உத்தியோகங்கள் பெறுவதில் தமிழ் இளைஞர்களுக்கு இனரீதியாகப் பாகுபாடு காட்டியமை, பொருளாதாரத்துறையில் தமிழ்ப்பிரதேசங்கள் புறக்கணிக்கப்பட்டமை’ அரச பயங்கரவாதம் தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டமை, தமிழ் மக்களின் உரிமைகளைப் புறக்கணித்து அவர்களின் இசைவு பெறுமல் அரசியல் அமைப்பை உருவாக்கியமை போன்ற அநீதிகளே காலம் காலமாகச் சிங்கள மக்களோடு ஒன்றுபட்டு வாழ்ந்த தமிழ்மக்களைச் சுதந்திரப் போராட்டத்திற்கு இட்டுச் சென்றன என்பது வரலாற்று உண்மையாகும். இந்த வரலாற்று உண்மையைப் புறக்கணித்து விட்டுத் தீர்வு எதுவும் காணமுடியாது. குறைபாடுகளுக்கு எதிராக நீதியானதும் நியாயமானதுமான தீர்வினை மாகாணசபை யோசனை கொண்டிருக்கவில்லை.

### ஒற்றையாட்சிக்கு உட்பட்டது

ஆட்சியாளர்களினுல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமாகாணசபை யோசனையானது இன்றைய ஒற்றையாட்சி அரசியலமைப்பிற்குட்பட்ட தொன்றுகும். அரசியலமைப்பை எதிர்த்து தமிழ்மக்கள் மத்தியில் உருவான கிளர்ச்சியின் வளர்ச்சியே இன்றைய சுதந்திரப் போராட்டமாகும். அரசியலமைப்பை உருவாக்குவதிலும் அதில் திருத்தங்கள் செய்வதிலும் தமிழ்மக்கள் பங்கு கொள்ளவில்லை, எனவே இன்றைய அரசியலமைப்பில் திருத்தங்கள் செய்வதன் மூலம் உருவாக்கப்படும் மாகாணசபைகளைத் தமிழ்மக்கள் இணக்கத்தீர்வாக ஒரு பொழுதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

மாகாணசபை முறையானது எமது பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது என்பதை உலகறியச் செய்யவே அது தொடர்பான கருத்தினை நாம் தெரிவிக்கின்றேம். பல்கலைக்கழக நுழைவிற்கு இனரீதியாகக் காட்டப்பட்ட பாகுபாடானது தமிழ் மாணவர்களை சுதந்திரப்போராட்டத்திற்குத் தூண்டியது. பல்கலைக்கழகக் கல்வி மற்றும் உயர்கல்வி தொடர்பான பூரண அதிகாரங்களை ஒற்றையாட்சி அரசாங்கமே கொண்டிருக்கும். தேசிய கல்விக்கொள்கை வேறுபாடு காட்டப்படாத ஒன்றுய் இருக்கும் என்று கூறப்பட்டுள்ள போதிலும் இது மீறப்படமாட்டாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது. இனவாத அரசாங்கங்களைத் தமிழ் மக்கள் நம்பத் தயாரக இல்லை. பெருந்தொகையான அதிகாரங்களும் இலாகாக்களும் அரசாங்ககத்திடமே இருப்பதால் இலாகாக்களிலும் கூட்டுத்தாபனங்களிலும் ஏற்படக்கூடிய வெற்றிடங்களுக்கு இப்பொழுதுள்ளதைப் போலவே இனப்பாகுபாடு காட்டி நியமனங்கள் வழங்கப்படலாம். இந்த அநீதியை நீக்க எந்தவிதமான ஏற்பாடும் இல்லை.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் அபகரிக்கப்படுவதையும், தமிழ் மக்கள் வாழ்வதற்குத் தேவையான நிலப்பரப்புக் குறைக்கப்படுவதையும், அவர்கள் வாழும் பிரதேசங்களிலேயே சிறுபான்மையினர் ஆக்கப்படுவதையும் தடுக்கவல்ல திட்டம் எதுவும் மாகாணசபை பற்றிய யோசனையில் இடம்பெறவில்லை. மாருகப் பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் அரசாங்கத்தின் பொறுப்பில் இருக்கும் என்பதும் அத்திட்டத்தில் தேசிய இன விகிதாசாரத்தில் குடியேற்றங்களை அரசாங்கமே செய்யும் என்பதும் தெளிவாக்கப்பட்டுள்ளது

### திருமலை துறைமுகம்

திருகோணமலைத் துறைமுகம் அதன் சுற்றுப்புறங்களின் நிர்வாகமும் மாகாணசபை நிர்வாகத்துள் கொண்டு வரப்படாமல் அரசாங்கத்தின் நிர்வாகத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ளமையும் மாகாணசபை எல்லைகளை அரசாங்கங்கள் மாற்றியமைக்கக் கூடியதாக இருப்பது எதிர் காலத்தில் தமிழ்ப் பிரதேசங்களை மேலும் துண்டாடி அவற்றைப் பலவீனப் படுத்தக் கூடியதாக இருப்பதையும் அவதானிக்குமிடத்து மாகாணசபை யோசனையானது ஒரு ஏமாற்று வேலை என்றே தோன்றுகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக தமிழ் மக்களின் உயிர், உடமை, பாதுகாப்பு பற்றிய பிரச்னை தலை தூக்குகின்றது போலீஸ் படையும் ஊர்காவல் படையும், ஆயுதப் படையும் இன ரீதியாக செயல்படுவதையும் தமிழ் மக்களின் உயிர், உடமைக்கு அவை பெருங் கேடு செய்திருப்பதையும் உலகம் அறியும். கட்டுப்பாடில்லாத அரச ஆயுதப் படையினர் தமிழ்ப் பிரதேசங்களில் நிலைகொண்டிருக்கும் வரை முகாங்கள் அங்கிருக்கும் வரை தமிழ் மக்களின் உயிருக்கும் உடமைக்கும் தொடர்ந்தும் அச்சுறுத்தல் இருந்தவண்ணமேயிருக்கும் ஆயுதப் படையின் அடாவடித்தனத்திலிருந்து தமிழ் மக்களைப் பாதுகாக்கத்தக்க திட்டம் கூட மாகாணசபை யோசனையில் இல்லை. இந்நிலையில் தமிழ்க் காங்கிரஸ் தனது சுதந்திர இலட்சியத்தில் நம்பிக்கை வைத்து அரசாங்கத்தின் மாகாணசபை ஆலோசனையை இணக்கத்திற்கான தீர்வாக ஏற்றுக்கொள்ளாது நிராகரிக்கின்றது. இலட்சியத்தில் ஒன்றுபட்டிருக்கும் தமிழ் இனத்தின் ஒருசாராரை மகாணசபைகளுக்கு இணங்கச் செய்வதன் மூலம் இலட்

(5ம் பக்கம் பார்க்க)

## மாகாண சபை

(4ம் பக்கத் தொடர்ச்சி)

சியத்தைப் பலவீனப்படுத்தவும் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசத்தை வடக்குக் கிழக்கு மாகாணசபையென்று இரண்டாகப்பிரிக்கவும், ஒற்றுமையைச் சிதைக்கவும் பிரச்சினைகள் சுமுகமாக தீர்க்கப்பட்டு விட்டன என்ற எண்ணத்தை வெளி நாடுகளில் ஏற்படுத்திக் கடன்களையும் உதவிகளையும் பெறவும் சுதந்திர இலட்சியத்திற்கு உதவும் நாடுகளை உதவ விடாமல் செய்யவும் அரசாங்கம் இத் திட்டம் மூலம் முயற்சிக்கிறது.என்று நாங்கள் கருதுகிறோம். தமிழ்த் தேசிய இனம் அடைந்த சொல்லொணாக் கொடுமைகள், உயிரிழப்புக்கள் உடமையிழப்புக்கள் ஆகியவற்றிற்கு மாகாண சபைகள் ஈடாகமாட்டா. தமது சுதந்திரத்திற்கான விலையையே தமிழ் மக்கள் கொடுத்துள்ளனர்.

இழந்த இறைமையையும் ஆட்சியுரிமையையும் சிங்களவர்களைப்போல மீளப் பெற்றவர்கள் என்ற வகையிலும் தங்களின் எதிர்காலத்தைத் தலைவிதியைத் தாங்களே தீர்மானிக்கக் கூடிய வகையில் ஒரு தேசிய இனத்தின் பிறப்புரிமையாகிய சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் எடுக்கின்ற முடிவினையது சுதந்திர தமிழீழமாகவோ அல்லது வேறு எதுவாக இருப்பினும் ஏற்றுக் கொள்ள எல்லாத் தரப்பினரும் அரசாங்கமாயினும் சரி அக்கறையுள்ள வெளிநாடாயினும்சரி அரசியல்க் கட்சிகளானாலும் சரி இயக்கங்களானாலும் சரி முன்வரவேண்டும் இதற்கு ஏதுவாக பிரிவினைக் கோரிக்கையைத் தடைசெய்யும் சட்டம் நீக்கப்பட வேண்டும், மக்களிடமே இறைமையுள்ளது. மக்கள் சக்தியே மாபெரும் சக்தி அந்த சக்திக்குத் தலை வணங்கி மக்கள் தீர்ப்பினை ஏற்கத் தமிழ்க் காங்கிரஸ் தயாராகவுள்ளது.

## அந்தியேட்டி கிரியையும் நன்றி நவிலலும்



**அமரர் கணபதி நன்னித்தம்பி**

தோற்றம்: 01-03-1904

மறைவு: 15-06-86

அன்பின் தெய்வமே அணையாத சோதியே எங்களைக் கண்ணீரிலாழ்த்திச் சிவபதமடைந்துள்ளீர்கள். உங்கள் ஆன்மா சாந்தியடைய இடையறாது இறைவனை வேண்டுகின்றோம்.

மரணச் சடங்கில்கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் யாவர்க்கும் எம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின் கின்றோம்.

15-07-86 செவ்வாய்க்கிழமை சங்கரப்பிள்ளை றோட் ஆனைக்கோட்டை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையில் கலந்து கொண்டு அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், யாவரையும் பணிவுடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மகன்,
மருமகள், பேரன்மார்.

C 3484

**லிடோ**
காலை 10-30, 2-30, 6-30
பாக்கியராஜ் சரிதா நடித்த
**மௌனகீதங்கள்**
(கலர் - புதிய பிரதி)

**வெலிங்டன்**
10-30, 2-30, 4-30, 6-30 P-M
முதல் முறையாக யாழ் நகரில் காண்பிக்கப்படுகிறது.
**VENOM**
Action - Thrill

## மக்கள் கடை

புலோலி திங்கள்

பருத்தித்துறையில் உள்ள ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் புலோலி ப. நோ. கூ. சங்கம் மக்கள் கடை ஒன்றைத் திறந்து வைத்துள்ளது.

இம்மக்கள் கடைத்திறப்பு விழா ப. நோ. கூ. சங்க இயக்குநர் சபைத்தலைவர் திரு. எஸ். நடராசா தலைமையில் நடைபெற்றது. ப. நோ. கூ. சங்க இயக்குநர் சபை உபதலைவரும் தென்புலோலி கிழக்கு இணக்கசபை உறுப்பினருமான டாக்டர் ப. கிருஸ்ணபிள்ளை மக்கள் கடையைத் திறந்து வைத்தார்.

## ஓராண்டு நினைவஞ்சலி



**பொன்னையா நடராசா**

(இளைப்பாறிய உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி)

மலர்வு: 27-10-24

உதிர்வு: 15-07-85

அன்பின் திருவுருவே, தெய்வமே! அயராது உழைத்து எம்மையெல்லாம் உயர வழிகாட்டிய உத்தமரே! இன்னும் சில காலம் எம் நிழலில் இவ்வுலகை நுகராது விரைந்து சிவனடியை நாடியது ஏன்? நீங்கள் இல்லாத வெறுமை என்றும் எம்மை ஏங்கவைக்கின்றது.

தங்கள் நல்லாத்மா சாந்திக்காக நாம் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரன்.
181, அரசடி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

C 3476

## இன்று மீண்டும்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்வார்கள்.

தமிழர்விடுதலைக் கூட்டணி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகள் இம்மாநாட்டில் கலந்து கொள்ளமாட்டாது.

இனப்பிரச்னை தீர்வு பேச்சுக்கள் எவ்விதம் அமைய வேண்டுமென்ற ஆரம்ப பேச்சுவார்த்தைகள் இன்று நடைபெறும்.

இதேவேளை இதுவரை ஏழு அரசியல் கட்சிகள் அரசாங்கத்தின் உத்தேச கொள்கைகள் குறித்து எழுத்து மூலமான கருத்துக்களை சமர்ப்பித்திருப்பதாக அரசியல் கட்சிகளின மாநாட்டுச் செயலாளர் திரு. பிலிக்ஸ்டயஸ் அபயசிங்க தெரிவித்துள்ளார்.

[து]

## பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம், பளை.

## வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம்

பச்சிலைப்பள்ளி ப. நோ கூ சங்கத்தில் ஏறக்குறைய 5000 வெற்றுச் சாக்குகள் விற்பனைக்குண்டு.

கேள்விப்படிவங்கள் ரூபா 100/- மீளப்பெறும் வைப்பாகச் செலுத்தி சங்க அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஏற்கனவே செலுத்தியோர் இம்முறை செலுத்த வேண்டியதில்லை. வெற்றுச் சாக்குகளை சங்க அலுவலக நேரங்களில்பார்வையிடலாம். விண்ணப்பங்கள் யாவும் 28 - 7 - 86 நண்பகல் 12-00 மணிக்கு முன் முத்திரையிடப்பட்ட பதிவுத்தபால் மூலம் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் ''வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ.ச.
பளை

12 - 7 - 86 (A - 933)

## 2-வது ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி றெஜினா சந்தியாப்பிள்ளை**

மறைவு: 16-07-1984

திருப்பலி காலை 6-30 மணி புனித யாகப்பர் ஆலயம்.

உம்பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

15 (50) 6ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

C 3483

## அரசுடனான...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்தார்.

ஒரு சில தனிக் கட்சிகள் இதனை எதிர்த்தால் தாம் அதற்காக எதுவும் செய்ய முடியாது என்றும் தாம்எடுக்கும் தகுந்த தீர்வுகளை உறுதியாக அமுல் நடத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இன்றுகொழும்பில் ஆரம்பமாகவுள்ள அரசியல் கட்சிகளின் மாநாட்டில் தமிழர் விடுதலைக்கூட்டணி பங்கு பற்றுவதில்லை யென்ற முடிவைமாற்றச் சந்தர்ப்பமில்லை யெனத் தெரிவித்த திரு. அமிர்தலிங்கம் தமது பிரதான பேச்சுக்கள் அரசாங்கத்துடன் தான் அமைய வேண்டும் என்றுந் தெரிவித்தார்.

பேச்சு வார்த்தைகளில் முன்னேற்றம் காணப்படும்பட்சத்தில் ஏனைய கட்சிகளுடன் தாம் உரையாடுவது அவசியமெனக்கருதினால் அக்கட்சிகளுடன் தொடர்பு கொண்டு பேச்சுவார்த்தை நடத்துவோம் என்றும்தெரிவித்தார்.

பேச்சுவார்த்தைகளுக்குத் தடையாகவுள்ள முட்டுக்கட்டைகளை முறியடிப்பது குறித்தும் நிரந்தர சமாதானத்திற்கான வாய்ப்புகள் குறித்தும் எவ்வளவு தூரம் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது என கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த திரு. அமிர்தலிங்கம் இதுவரை நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் பயன் வாய்ந்தவையாகவுள்ளன வென்றுதாம் கருதுவதாகவும் தொடர்ந்தும் இதேவழியில் முயற்சி செய்தால் தீர்வொன்றைக் காணக் கூடிய சாத்தியக்கூறுகளை எதிர்பார்க்கலாம் என்றும் தெரிவித்தார்.

(து)

## மன்னார்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பாதுகாப்பமைச்சு அறிவித்துள்ளது. ஆயினும் வேறு தகவல்களின் படி அவர்கள் பொது மக்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றைய மோதல்களின் போது குண்டு வீச்சு விமானங்கள் பாவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விமானக் குண்டு வீச்சினால் 50க்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும், இடிபட்ட வீடுகளின் கீழ் சில மக்களின் சடலங்கள் மீட்கப்படாதிருப்பதாகவும் தெரிகின்றது:

மன்னார் ஆஸ்பத்திரியில் இறந்த சிலரின் பிரேத பரிசோதனைகள் நடைபெற்றன.

ரயில்பாதையொன்றை செப்பனிடும் பணிகள் இடம் பெற்றுக்கொண்டிருந்த வேளையிலேயே இம்மோதல் ஆரம்பித்ததாகவும் அறிவிக்கப்பட்டது. இம்மோதலில் ரயில் பாதை சேதமானதாகவும், பெற்றோல் நிலையமொன்று தகர்க்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இத்தாக்குதல் குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில், இராணுவத்தினர்மீது தமது இயக்கத்தினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது பின் வாங்கியதாகவும், ஏ. கே 47 ரைபிள் ரகத்துக்கான 150 ரவைகளையும், கவசத் தொப்பிகள் பலவற்றையும் கைப்பற்றியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ மா]

## பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க்,
கனடா
(கொழும்பிலிருந்து நேரடிப் பிரயாணம்)
உடனடியாக எமது காரியாலயத்தில் பதிவுசெய்து கொள்ளவும்.

சவூதி அரேபியா
கிளினேஸ்க்கு பிரயாண ஒழுங்குகள் 20 நாட்களுக்குள் செய்து கொடுக்கப்படும்.
(i) வைத்தியசாலை
(ii) விமான நிலையம்
(iii) தொலைத் தொடர்புத் திணைக்களம்
மற்றும்:-
லிபியா குவைற் டுபாய் ஆகிய நாடுகளுக்கும் உடனடி பிரயாண ஒழுங்குகள் செய்துகொடுக்கப்படும்.
அத்துடன்
பாஸ்போட், பொண்ட், விஸா, ரிக்கற்றிங் என்பன உடனுக்குடன் செய்துகொடுக்கப்படும்.
விபரங்களுக்கு:-
**யூனிவேர்சல் ஏஜென்சிஸ்,**
125 (455), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(பெற்றோலியம் கூட்டுத்தாபன முன்பாக, ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமை.)
(A 796)

## பண்ணிசைப் போட்டி

யாழ்ப்பாணம், செவ்

நல்லூர் கல்வி வட்டார பண்ணிசைப் போட்டிகள் யாழ் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நல்லூர் வட்டாரக்கல்வி அதிகாரி திரு சு. சிவநாயகமூர்த்தி தலைமையில் அண்மையில் நடைபெற்றது போட்டிகளில் முதலாமிடத்தைப் பெற்ற மாணவர்கள் விபரம்:-

**பாலர் பிரிவு:–**
ஆண் தனி க. மயூரன் நல்லூர் ஸ்தான சி கி, த க. பாடசாலை. பெண் தனி பொ. குமுதினி கொச்சுவில் கிழக்கு நாமகள் வித்தியாசாலை.

**ஆரம்ப பிரிவு:–**
ஆண்-தனி தி. அகிலன் திருநெல்வேலி ஞே. க. பாடசாலை, பெண்-தனி க. சியாமளாஸ்கி யா/இந்துமகளிர் ஆரம்பபாடசாலை. பெண்குழு நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாசாலை

**கீழ்ப்பிரிவு:–**
ஆண்-தனி- நா. சண்முகநாதன் நாயன்மார்கட்டு மகேஸ்வரி வி. ஆண்-குழு, யாழ் இந்து ஆரம்பபாடசாலை. பெண்தனி- வி. கவிதா நல்லூர் சென் பெனடிக்ற் வி. பெண்குழு- இந்துமகளிர் ஆரம்பபாடசாலை.

**மத்தியபிரிவு:–**
ஆண்-தனி கு. கோகுலபாலன் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை. பெண் தனி சி. சுகன்யா யா/திருநெல்வேலி ஞே. க. பாடசாலை, பெண் குழு செங்குந்தா இந்துக் கல்லூரி.

**மேற்பிரிவு:-**
ஆண் தனி இ குகானந்தன் யாழ். இந்துக்கல்லூரி ஆண்குழு யாழ். இந்துக்கல்லூரி. பெண்தனி மு. சுபவிஞேதினி யாழ்/இந்துமகளிர் கல்லூரி. பெண்குழு யா/நல்லூர் ஸ்தான சி. சி. த. பாடசாலை

**அதிமேற்பிரிவு:–**
ஆண் தனி தி. கருணுகரன் யா/கொக்குவில் இந்துக் கல்லூரி. பெண் தனி பா. சுஜாத்தா யா/ இந்துமகளிர் கல்லூரி. பெண்குழு இந்து மகளிர் கல்லூரி.

---

## 'கூட்டுறவுடன் ஈடுபாடு கொண்டவர்கள்'

யாழ்ப்பாணம், செவ்

''எமதுபலநோக்குக்கூட்டுறவுச்சங்கம் பொதுமக்களின் உணவுத்தேவைகளுடன் அவர்கள் ஈடுபாடுகொண்டுள்ள கலை, கலாசாரத்துறைகளையும் வளர்ப்பதற்கு பாடுபட்டுவருகிறது. அண்மையில் கலாசார கூட்டுறவுப் பெருமன்றம், நிறுவப்பட்டுள்ளது. இன்று நடைபெறும் அமரர்கள் பண்டிதமணி, கே டானியல், சரத்முத்தெட்டுவேகம ஆகிய மூவரும் ஒருவகையில் கூட்டுறவுத்துறையுடன் ஈடுபாடுகொண்டவர்கள்''.

இவ்வாறு அமரர்கள் பண்டிதமணி, சி. கணபதிப்பிள்ளை, கே. டானியல், சரத்முத்தெட்டுவேகம ஆகிய மூவருக்கும் கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் சங்கத்தின் சார்பிலும் கலாசார கூட்டுறவுப்பெருமன்றம் சார்பிலும் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்திற்குத் தலைமைவகித்த சங்கத் தலைவர் திரு. த. சிதம்பரப்பிள்ளை பேசுகையில் கூறினுர்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை பற்றி சைவப்புலவர் சி. வல்லிபுரம், கருணையோகன் ஆகியோரும், கே. டானியல் பற்றி திருவாளர்கள் வீ. சின்னத்தம்பி, எஸ் வன்னியகுலம் ஆகியோரும், சரத் முத்தெட்டுவேகம பற்றி திருவாளர்கள் சி. சிதம்பரநாதன், அ. விஜயநாதன் ஆகியோரும் மற்றும் நெல்லை க. பேரன், க. சிதம்பரப்பிள்ளை ஆகியோரும் உரை நிகழ்த்திஞர்கள். கவிஞர் மன்னவன் மு. கந்தப்பு நன்றி கூறிஞர்.

---

## தீவகத்தின் புகழ்பெற்ற வைத்தியர்

கலை இலக்கிய, அரசியல் துறைகளில் மட்டுமன்றி வைத்தியத்துறையிலும் முன்னணியில் திகழும் பெருமை பெற்றது தீவகம். தீவகத்தின் மூத்தவைத்திய பரம்பரையின் ஒளிவிளக்காய்த்திகழ்ந்து பல்லாயிரம் மக்கள் பிணிதீர்த்த பெருமைக்குரிய முதுபெரும் வைத்தியர் திரு. வீரவாகு தம்பிராசா (தம்பையா) தமது 85-வது வயதில் காலமானுர் கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக வைத்தியத்துறையில் பலசாதனைகளை நிலைநாட்டிய இப்பெரியாரைத் தீவகமக்கள் என்றுமே மறக்கமாட்டார்கள்

புகழ்பெற்றவைத்தியகுடும்பமொன்றில் புங்குடுதீவில் பிறந்த இவர் தமது ஆரம்பக் கல்வியை இங்குள்ள அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலும், இடைநிலைக்கல்வியை தெல்லிப்பழை யூனியன் கல்லூரி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆகியவற்றிலும் பெற்றுர் பின்னர் உயர்கல்வியில் நாட்டம் கொள்ளாது தமது பரம்பரைத் தொழிலான வைத்தியத்தில் ஈடுபட்டார். தமது தாய் மாமனுரும் சரவணையூர் பிரபலவைத்தியருமான திரு. வி. இலட்சுமணபிள்ளையிடம் ஒரு சீடமுறையில் வைத்தியத்தைக்கற்றுத் தேர்ச்சிபெற்றுர் 1924ம்ஆண்டு முதல் வைத்தியத்துறையில் ஈடுபட்ட திரு. தம்பிராசா 60 ஆண்டுகளுக்கு மேலாக இறக்கும்வரை வைத்தியத் தொழிலில் பல சாதனைகளை நிலைநாட்டினுர்

நாடி சாஸ்திரத்தின் மூலம் நோயை நன்கு அறிந்து வைத்தியம்செய்வதில் வல்ல இவர், குழந்தை வைத்தியத்தில் விசேஷ தகுதியுள்ளவராக அரசினரால் அங்கீகரிக்கப் பெற்றவர் மரணத் தறுவாயில் அவதியுற்ற குழந்தைகள் பலரது உயிரைக்காப்பாற்றிய பெருமைக்குரியவர்.

நமது கிராமப் புறங்களில் முன்னர் உயிராபத்தை விளைவிக்கும் நோய்களாகக் காணப்பட்ட வாந்திபேதி, மலேரியா, வயிற்றேட்டப் போன்ற நோய்களால் பீடிக்கப்பட்டு அவதியுற்ற பலரைத் தமது சிகிச்சையினுல் காப்பாற்றியபெருமை இவருக்குண்டு. நோயாளிகளை கைநாடி பார்த்து இன்ன காலத்தவணையில் இவர் சுகம் பெறுவார்; இன்றேல் மரணமாவார் என்பதை ஐயத்திரிபின்றி அறுதியிட்டுக் கூறிவிடுவார். இதஞல் இவர் புகழ் மேலும் அதிகரித்தது

விடாமுயற்சியும், எடுத்த காரியத்தைத் தொடுத்து முடிக்கும் மன உறுதியும் படைத்த இவ்வைத்தியர் 1939ம் ஆண்டளவில் சிங்கப்பூர், மலேயா நாடுகளுக்கும் சென்று சிறிது காலம் வைத்தியப் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொடுமை கண்டு பொறுக்காத மனமும் இளகிய இதயமும் படைத்தவர். இனியநன் மக்களுக்கு நல்லறிவூட்டி, வாழும்வகை இன்னதென வாழ்ந்து காட்டி, கற்றேர் அவையிலும் தம் மக்களை முதன்மை பெற்றிருக்கச் செய்த பெருமைக்குரியவர், அவரது உருவம் மறைந்தாலும் அன்னுரது வைத்தியப் பணிகள் என்றும் எம்மக்கள் உள்ளங்களில் நிலைபெற்று விளங்கும் என்பதில் ஐயமில்லை. அவரது ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திப்போமாக!

ஆசிரியமணி
சி. க. நாகலிங்கம்

---

# இன்றைய பலன்

மாதம்- ஆனி
திகதி- 31 (1986-07-15)
கிழமை- செவ்வாய்
திதி- அட்டமி காலை 9-10ன் மேல் நவமி
நக்ஷத்திரம்- சித்திரை
பி. ப வரை

மேடம்- குடும்பம் இன்று கலக்கோயிலாக மாறும். இசைத்துறையில் அதிக ஆர்வம் ஏற்படும். களஸ்திரவழியால் பெருமைக்கும் இடமுண்டு.

இடபம்- விஷப் பரீட்சை மூலம் விபரீதங்கள் விளையும். மயக்கும் மொழியால் பணத்தை இழக்க நேரிடும்.

மிதுனம்- நினைத்தது நடக்கும். பந்துசனங்களின் கொண்டாட்டம் உண்டு. பிதாவழிமூலம் எதிர்பாராத பொருள்வரவும் உண்டு.

கடகம்- வணிகர்களுக்கு வியாபாரத்திற்கு இடமுண்டு. புதிய முயற்சிகள் கைகூடும். செலவினங்கள் கைக்கடங்கியதாக இருக்கும்.

சிங்கம்- வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு பல வழிகளிலும் முயற்சி செய்வீர்கள். புதுமையான செய்தியொன்றும் கிடைக்கக் கூடும்.

கன்னி- பிரயாணத்தின் போது பொருள் நழுவக் கூடும். திருடர் பயத்திற்கும் இடமுண்டு. முடக்கிய வேதனம் கவலையைத் தரலாம்

துலாம்- தெய்வ நம்பிக்கையில் அதிக ஆர்வம் பிறக்கும். புண்ணிய ஸ்தல யாத்திரையொன்று மேற்கொள்ளப்படலாம். உடல்நிலையில் கவனம் வேண்டும்.

விருச்சிகம்- உறவினர் வருகை உங்களுக்கு உவகையைத் தரலாம். சுற்றுவட்டாரத்தில் மதிப்பு உயரும். குடும்பத்தில் கணவன் மனைவி உறவு மிகவும் சுமுகமாக இருக்கும்.

தனுசு- எதிலும் அலட்சிய மனப்பான்மை தோன்றக் கூடும். சகோதர வழியால் சஞ்சலத்திற்கும் இடமுண்டு.

மகரம்- ஆராய்ச்சிகளில் ஆர்வம் தோன்றும். வாகனத்தின்மூலம் பொருள்வரவிற்கும் இடமுண்டு.

கும்பம்- உறவினர் மத்தியில் செல்வாக்குப் பெருகும். புத்திரவழியால் புகழ் வந்து சேரும். தெய்வத்தின் துணையுமுண்டு,

மீனம்- தூரதேசவாசம் உங்களைத் துயரத்தில் ஆழ்த்தும். எதிர்பாராத விபத்திற்கும் இடமேற்படலாம். ஆயுதங்களுடன் பழகுபவர்கள் அவதானம் வேண்டும்.

திருமலை ரவீந்திரன்

---

## பயன்பாடு பற்றிய நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், செவ்:

கற்பித்தலில் கட்புல செவிப்புல சாதனங்களின் பயன்பாடு பற்றிய நிகழ்ச்சியொன்று இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ். சென் ஜோசப் வித்தியாலயத்தில் (கொழும்புத்துறை) காலை 10 மணியிலிருந்து பிற்பகல் 3-30 மணி வரை நடைபெறும் இந்நிகழ்ச்சிக்கு யாழ். வட்டாரக் கல்வி அதிகாரி திரு. இ சிவானந்தன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

---

## தையல் யந்திரம் அன்பளிப்பு

பண்டத்தரிப்பு, திங்கள்

திருகோணமலை' வவுனியா ஆவட்டங்களிலிருந்து வன்செயல்களினுல் பாதிக்கப்பட்டு சில்லாலையில் வந்து தங்கியுள்ள அகதிகள் குடும்பங்களின் நலன் கருதி வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் 3 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான தையல் யந்திரமொன்றை அன்டளிப்பு செய்துள்ளது.

அண்மையில் வடலியடைப்பில் நடைபெற்ற வட்டு லயன்ஸ் கழக 8-வது வருடாந்த ''சாட்டர்'' வைபவத்தின்போது கழகத்தின் சார்பில் புதிய தலைவர் டாக்டர் எமில் அத்தனுசியார் இதனை கையளித்தார்.

---

## கும்பாபிஷேகம் நடத்த ஏற்பாடு

நீண்டகாலமாகப் பொலிவிழந்து காணப்பட்ட அச்சுவேலி உலவிக்குளம் சித்தி விநாயகர் ஆலய மகாகும்பாபிஷேகம் விரைவில் வெகுசிறப்புற நடைபெற உள்ளது கடந்த பத்துவருடங்களாக இக்கோயில் பாலஸ்தாபனம் செய்துவைக்கப்பட்டிருந்தது.

கடந்த கால் நூற்றுண்டு காலவரலாற்றில் பல பூசல்களாலும் பல கண்டங்களைத் தாண்டி தற்போது ஊர்மக்களினதும் இளைஞர்களினதும் அயராத உழைப்பினுல் புதுப்பொலிவு பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது

கடந்தவாரம் நடைபெற்ற திருப்பணிச்சபைக் கூட்டத்தில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 10ம் திகதி மகாகும்பாபிஷேகம் செய்வதென தீர்மானிக்கப்பட்டது. புனருத்தாரண வேலைகளில் பெரும்பங்காற்றிய ஊர்ப்பெரியவர்களும் அதிக அளவில் நிதியுதவி புரிந்த கொடைவள்ளல்களும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

---

## ஓய்வு பெறுகிறுர்

பண்டத்தரிப்பு, திங்கள்

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியதிபராக கடந்த 14 வருடங்களாகக் கடமையாற்றிவரும் திருமதி கலாவதி ஆறுமுகதாசன் இம்மாதம் 21ம் திகதியன்று தமது 60வது வயதில் பதவியிலிருந்து ஓய்வு பெறவுள்ளார். கல்லூரி ஆசிரியர் கழகமும் மாணவர்களும் ஒன்றிணைந்து தனியான பிரிவு உபசார வைபவம் ஒன்றை இம் மாதம் 21ம் திகதியன்று நடாத்தவுள்ளனர்.

---

## நெஞ்சம் மறப்பதில்லை



''நல்லாரைக் காண்பதும் நல்லார் சொற்கேட்பதவும், நல்லாரோடுஇணங்கியிருப்பதுவும் நன்று'.

கோப்பாய் காலஞ்சென்ற வைத்திய கலாநிதி சுப்பிரமணியத்தின் அன்பின்மனைவி நல்லாள் வள்ளியம்மை இறைவனடி சேர்ந்து இன்று ஒரு மாதமாகிறது. ''மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத்துணை'' என்றவள்ளுவரின் வாக்குக்கு இலக்கணமாய், மனைமாட்சியில் மகா இலக்குமியாய் விளங்கியவர் அமரர் வள்ளியம்மை. அவர் குடும்பப்பற்றும் இறைபற்றும் முதிர்ந்தவராய்த் திகழ்ந்தவர். எப்பொழுதும் அன்னுர் புன்னகை பூண்டவராய், அன்புள்ளம் கொண்டவராய், இன்சொல், இன்செயல் மூலம் அனைவரதும் உள்ளத்தைக் கவர்ந்தவர். தருமமே தலைகாக்கும் என்பதைத் தாரக மந்திரமாக இறுதிமூச்சுவரை கடைப்பிடித்தவர்.

வள்ளியம்மை சுப்பிரமணியத்தின் மறைவு அவரைஅறிந்தவர்களுடைய இதயத்தைப் பெரிதும் நெகிழச்செய்து விட்டது. விதியை யார் அறிவார். காலன் யாரைத்தான் விட்டுவைத்தான்.

வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து வானவன் மலரடி சென்ற அவரது ஆன்மா சாந்தியடைய திருவருளைப் பிரார்த்திப்போமாக.

துரை. ஆரோக்கியதாசன்.

---

## உணவுத்தட்டுப்பாட்டை எதிர்கொள்ள

# வீட்டுத்தோட்டங்கள் அமைக்க வேண்டும்

மாவிட்டபுரம், திங்கள்.

''இன்றைய நெருக்கடியான சூழ்நிலையில் வரப்போகும் உணவுத் தட்டுப்பாட்டை எதிர் கொள்ள வீடுகள் தோறும் வீட்டுத் தோட்டங்கள் அமைக்க நாம் உடனடியாக முன்வர வேண்டும் ''

இவ்வாறு ஊரெழு பயிர்ச் செய்கை அலுவலர் பிரிவில் வீட்டுத் தோட்டப் போட்டிக்கான இலவச விதைகள் வழங்கும் வைபவத்தில் பேசிய ஊரெழு பயிர்ச் செய்கை அலுவலர் திரு. சி. சக்திகிரீவன் கூறினுர்.

ஊரெழு கி மு. சங்க மண்டபத்தில் சிறு விவசாயிகள் சம்மேளனத் தலைவர் திரு சி. கணேசு தலைமையில் நடந்த இவ் வைபவத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''வடக்கும் தெற்கும் வாகனப் போக்குவரத்து தடைப்படும் சூழ்நிலை உருவாகி வரும் இந் நேரத்தில் உணவுத் தட்டுப்பாடு ஒன்றை நாம் எதிர்கொள்ள நேரிடலாம். வாகனப் போக்குவரத்து முற்றுக துண்டிக்கப்பட்டால் எமது மக்கள் பட்டினிச் சாவால் இறக்க நேரிடும். ஆகவே இக் கஷ்டத்திலிருந்து மீள நாம் சிறிய அளவிலாவது வீட்டுத் தோட்டங்களை அமைத்து எமது தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும்'' என்றுர்.

---

## மரம்நாட்டு விழா

பண்டத்தரிப்பு, திங்கள்

பண்டத்தரிப்பு சந்தையில் மரம்நாட்டும் விழா அண்மையில் நடைபெற்றது. யாழ். அபிவிருத்திச்சபையின் பண்டத்தரிப்பு பட்டின உபஅலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு எஸ். ரி. கதிரவேலுப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் யாழ் மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராசா கலந்து கொண்டு மரக்கன்றுகளை அன்பளிப்பு செய்தார்.

---

## 1500 ரூபா நிதியுதவி

புலோலி, திங்கள்

இராணுவத்தினரின் மோட்டோஷெல் தாக்குதல்களுக்கு இலக்காகி கொலையுண்ட பருத்தித்துறை தம்பசிட்டியினைச் சேர்ந்த செல்வி. தமிழ்ச் செல்வி பேரம்பலத்தின் குடும்பத்திற்கு சுப்பாமடம் கடற்றெழில் விரிவாக்க சேவா சங்கம் 1500 ரூபா நிதியுதவி வழங்கியுள்ளது.

### ஐக்கியநாணய சங்கங்கள் ஊடாக---

# குறைந்தசெலவு வீடமைப்புத் திட்டங்களுக்கு கடனுதவி

வவனியா, திங்கள்.

அடுத்தாண்டிற்குரியகுறைந்த செலவிலான வீடமைப்பு திட்டங்களுக்குஐக்கிய நாணய சங்கங்கள் ஊடாகவே கடன் உதவிகள் வழங்கப்படவுள்ளது.

இதனை கருத்தில் கொண்டே கிராம சேவையாளர் பிரிவுகளில் ஐக்கிய நாணய சங்கங்கள் அங்குராப்பணம் செய்யப்பட்டு வருகின்றது.

வவனியா உதவி கூட்டு ஆணையாளர் திரு. எஸ். தில்லை நடராஜா நெடுங்கேணியில் நடைபெற்ற மேற்படி விடயம் தொடர்பான கருத்தரங்கில் உரையாற்றுகையில் இத்தகவலை தெரிவித்தார்

கிராமமோதய சபைத்தலைவர்திரு பீட்டர்பொன் கலன் தலைமையில் இக்கருத்தரங்கு இடம் பெற்றது.

திரு. தில்லை நடராஜா மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது:

''பத்து லட்சம் வீடமைப்பு திட்டத்தின் கீழ் கடன் வழங்குதல் கடனை மீளப்பெறுதல் எல்லாம் அடுத்த வருடம் முதல் ஐக்கிய நாணய சங்கங்களின் ஊடாகவே இடம் பெறவுள்ளது.

இதனை கருத்தில் கொண்டே கிராமிய மட்டத்தில் சங்கங்களை அங்குரார்ப்பணம் செய்யப்பட வேண்டியுள்ளது

18 வயதிற்கு மேற்பட்ட இருபாலாரும் அங்கத்தவராய் சேர முடியும்., பிரவேசப் பணம் 5 ரூபாவும் பங்குப் பணம் 100 ரூபாவும் செலுத்தப்படவேண்டும்.

''குறைந்தது ஒரு கிராம சேவையாளர் பிரிவில் பத்து உறுப்பினர்கள் அங்கத்தவராய் சேர்ந்தால் மட்டுமே சங்கத்தினை அங்குரார்ப்பணம் செய்ய முடியும் என்றும் கூறினார்.

'ஊன்சால்கட்டி ஐக்கிய நாணய சங்க தலைவராகக் திரு. எஸ் சிவகுரு, செயலாளராக திரு வி. அருளானந்தன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்''

# தமிழர் இன்னல் நீங்க இறைவழிபாடு அவசியம்

கிளிநொச்சி, திங்கள்.

இன்று தமிழ் மக்கள் சொல்லொணுத் துயரங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் இவ்வேளை இவர்களின் இன்னல் நீங்க இறைவழிபாடு அவசியமாகும் என்று நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலயத்தில் சரசாலை இந்து இளைஞர் மன்றத்தால் நடத்தப்பட்ட மணிவாசகர் குருபூசையின்போது சிறப்புரையாற்றுகையில் கவிஞரும் இளைப்பாறிய ஆசிரியருமாகிய சிங்கை ஆழியான் வே. பரமநாதன் கூறினார்.

சைவப்புலவர் சு. கைலாசபிள்ளை தலைமையில் இவ்வைபவம் சிறப்பான முறையில் நடைபெற்றது.

இந்து இளைஞர் மன்றக் காப்பாளரும் வைத்தியருமான திரு ச. நமசிவாயம் பேசுகையில்: நமது முன்னோர்கள் காட்டிய வழிமுறைகள் பக்தி மார்க்கம் முதலானவற்றை இன்றைய இளைய சந்ததியினர் புறக்கணிக்காது பேணிப்பின்பற்ற முன்வரவேண்டும் என்றார்.

சரசாலை இந்து இளைஞர் மன்றத் தலைவர் திரு கு. ஞானேஸ்வரனும் உரையாற்றினார் சாவகச்சேரி இந்துக் கல்லூரி விரிவுரையாளர் க செல்லத்துரை சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

# சைவத் தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சிக்கு எழுச்சிவிழா

யாழ்ப்பாணம்,செவ்வாய்.

''நமது நாட்டில் சைவ தமிழ்க் கலாசாத்தை நிலைநிறுத்தியவர் நாவலர் பெருமான் அவர் யாழ்ப்பாணத்திலும் சிதம்பரத்திலும் நிறுவிய சைவப்பிரகாசவித்தியாசாலைகள் இருகண்கள் போன்றவை. நாவலர் பெருமானின் அடியை ஒற்றி வாழ்ந்த சைவத் தமிழ்ப் பேரறிஞர் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை நினைவாக, யாழ்ப்பாணம் நாவலர் மகாவித்தியாலயத்தில் நிறுவப்படவுள்ள சைவ தமிழ்ப் பண்பாட்டு நிலையம் வருங்காலக் குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்குக் கலங்கரை விளக்கமாகத் திகழும் என்பது நிச்சயம் சைவ தமிழ்ப் பண்பாட்டு நிலைய வளர்ச்சிக்கு முன்னேடியாக ஒரு சமய எழுச்சி விழாவை நடாத்துவது முக்கியம்''

நாவலர் மகாவித்தியாலயத்தில நிறுவப்படவுள்ள சைவ தமிழ்ப பண்பாட்டு நிலைய ஆலோசனைக் குழுவுக்குத் தலைமை வகித்துப் பேசிய யாழ். பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் திரு இ சுந்தரலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாவலர் தர்மகர்த்தா சபை சார்பிலான இக்கூட்டம் யாழ் கல்வித் திணைக்களத்தில் இடம்பெற்றது

பிரதம கல்வி அதிகாரி திரு. கு.சோமசுந்தரம் பேசுகையில் நாவலர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகம் அங்குரார்ப்பணம் செய்து வைப்பதற்கு அத்திபாரமாக எதிர்வரும் செப்ரெம்பரில் எழுச்சி விழாவை நாவலர் வித்தியாலயத்தில் நடத்துவது பொருத்தம் என்றும், இவ்விழாவில் மாணவர் சார்பிலான பிரதிநிதிகளும் பங்குபற்ற வசதி செய்யப்படல் அவசியம் என்றும், சமயச் சொற் பொழிவுகள், பண்ணிசை, புராண படனம், ஆடற்கலை இவற்றுக்கு முக்கியத்துவம் அளிப்பது பொருத்தம் என்றும் கூறினார்.

யாழ்ப்பாண வட்டாரக் கல்வி அதிகாரி திரு. இ. சிவானந்தன் பேசுகையில நாவலர் அரங்கு, சிவபாதசுந்தரனார் அரங்கு, பண்டிதமணி அரங்கு எனப் பிரித்து மூன்று நாட்களுக்கு எழுச்சி விழாவை நடாத்துவது சிறப்பு என்றார்.

குழு அங்கத்தவர்களான நாவலர் வித்தியாலய அதிபர் திரு. ஞா சிவஞானசுப்பிரமணியம், வித்துவான் இ திருநாவுக்கரசு. சைவப் புலவர் க சி. குலரத்தினம், மயிலங்கூடலூர் பி. நடராசன், பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையின் காரியதரிசி அ. பஞ்சாட்சரம், ஆசிரியகலாசாலை விரிவுரையாளர் திருமதி மங்கயர்க்கரசி திருச்சிற்றம்பலம் ஆகியோரும கருத்துரை வழங்கினார்கள். பேராசிரியர் அ. சண்முகதாஸ் நன்றியுரை வழங்கினார். (ஐ)

# மருந்தினை கிரமமாக உட்கொண்டால் தொழுநோய் விரைவில் குணமடையும்

சுழிபுரம், திங்கள்

''யாழ்ப்பணப் பகுதியில் வாழும் மக்களில் சுழிபுரம் பகுதியில் கூடுதலானதொழுநோயாளர்கள் வாழ்கின்றனர். இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் மருந்து வகைகளை ஒழுங்காக எடுத்து வருவார்களானால் நிச்சமாக விரைவாக குணமடைவார்கள். இநநோய் முற்றாக மாற்றக் கூடியதாகும்.''

இவ்வாறு சுழிபுரம் சுகாதார அபிவிருத்திக் கழகம் ஒழுங்கு செய்து நடாத்திய சுகாதாரக் கருத்தரங்கில் பங்குபற்றி உரையாற்றிய மானிப்பாய் சுகாதார அதிகாரி திருமதி ஜி. கந்தசாமி குறிப்பிட்டார்:

மேலும் அவர் தமதுரையில் பின் தங்கிய மக்கள் வாழும் பகுதியிலுள்ள கல்விமான்கள், பொதுஸ்தாபனங்கள், பொது மக்கள் தொழுநோயை ஒழிக்க முன்வருவதோடு எம்முடன் சேர்ந்து பாடுபட வேண்டும் என்றார்.

இக் கருத்தரகு கழகத் தலைவர் சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி அதிபர் திரு க. அருணசலம் தலைமையில் நடைபெற்றது.

## மருந்துபெற அனுமதி

சுழிபுரம், திங்கள்

ஐயாயிரம் ரூபா பெறுமதியான மருந்துவகைகள் வாங்க சுழிபுரம் அபிவிருத்திச்சபை உபஅலுவலகத்தினர் யாழ். மாவட்ட சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளனர்.

## குருபக்தி அவசியம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

மாணவர்கள் குருபக்தியுள்ளவர்களாகத் திகழ வேண்டும். மாதா, பிதா, குரு தெய்வம் எழுத்தறிவித்தவன் இறைவனுவான். தாரமும் குருவும் தலைவிதிப் பயன் போன்ற நல்வார்த்தைகளிலிருந்து குருவை அவர்கள் எப்படி மதித்துள்ளனரென்பது புலனுகின்றது

இவ்வாறு யாழ் இளைய தம்பி இந்து வித்தியாலய மணிவாசகர் குருபூசையில் பாடசாலையதிபர் உரையாற்றினார். மேலும் அவர் பேசுகையில் ஞானத்தைப் போதித்தாரென்பதிலிருந்து குருவின் மான்மியம் தெளிவாகிறது, இதனை நன்குணர்ந்து ஆசிரியர்களும் பண்புள்ளவர்களாகவும் சேவை மனப்பான்மை உள்ளவர்களாகவும் மாணவர்களை வழி நடத்துதல் வேண்டும். என்று கூறினார்.

இவ் வைபவம் ஆசிரியை செல்வி கே. சரஸ்வதி தலைமையில் நிகழ்ந்தது. பழைய மாணவி செல்வி, சோ. நளினியின் இன்னிசை நிகழ்ச்சி புயம் செல்வி. ஜீ. மஞ்சரியின் சங்கீத கதாப்பிரசங்கமும் நடைபெற்றது. மாணவி சி சுதர்சினி நன்றிகூறினார்.

# இன்றைய சூழ்நிலையில் சனசமூகநிலையங்களின் பங்கு

நெல்லியடி, திங்கள்

''இன்றைய கால கட்டத்தில் சனசமூக நிலையங்கள் பாரிய திட்டங்களை மேற்கொண்டு நடாத்த வேண்டிய பொறுப்புடையனவாக இருக்கின்றன. இணக்கசபைகள். விழிப்புக்குழுக்கள், முதலுதவிச் சிகிச்சைப்பயிற்சி நிலையங்கள் என்பனவற்றையும் பொறுப்பேற்றும் நடத்தலாம்''.

இவ்வாறு யாழ். மாவட்ட உள்ளூராட்சித் திணைக்களச் சனசமூகஅபிவிருத்தித்தலைமை அதிகாரி திருமதி த. பாஸ்கரன் கடந்தவாரம் நெல்லியடி மெதடிஸ்தமிஷன் பாடசாலை மண்டபத்தில் நடந்த சனசமூகநிலையச் சமாசக் கூட்டத்தில் பிரதமவிருந்தினராகக் கலந்து உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

திரு ம, கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திருமதிபாஸ்கரன் மேலும் கூறியதாவது:

கிராமிய எழுச்சி. மக்களின் பொருளாதார மேம்பாடு ஆகிய துறைகளிலும் சனசமூக நிலையங்கள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். வீட்டுத் தோட்டங்கள் விவசாய நடவடிக்கைகள் போன்றனமூலம் வாழ்க்கைச்செலவையும் சமாளிக்க உதவவேண்டும்'.

திருவாளர்கள் என். பேராசிரியன், எஸ். செந்துராசா, என். செல்லையா, என்.சத்தியமூர்த்தி ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

# 'கலை, இலக்கியம் வளரவேண்டும் என்ற அவா கொண்டவர்'

யாழ்ப்பாணம், செவ்.

'கலை, இலக்கியங்கள் வளர வேண்டும் இதன் மூலம் தமிழ்மொழி பார்புகழும் மொழியாகத் திகழ வேண்டுமென்ற அவாக் கொண்டவராகத் திரு. அம்பிகைபாகன் திகழ்ந்தார்''

இவ்வாறு, யாழ் வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் அம்பிகைபாகன் கலையரங்கத்தை திறந்து வைத்துப் பேசும்போது திரு. சி. வைரமுத்து குறிப்பிட்டார்.

மேற்படி வித்தியாலய அதிபர் திரு சிவ சரவணபவன் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் திரு வைரமுத்து மேலும் பேசுகையில் அம்பிகைபாகன் பெயரை இக் கலையரங்கத்துக்குச் சூட்டியுள்ளமை கலை இலக்கியங்கள் வளர அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்கு ஞாபகச்சான்ருக என்றுமிருக்கும் இக்கல்லூரியில் அவர் அதிபராகவும் ஆசிரியராகவும் கடமை புரிந்த முப்பதாண்டுகாலம் பொற்காலம் என்றே குறிப்பிட வேண்டும்,' என்ருர்.

பழைய மாணவர் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்வைபவத்தில் பல பிரமுகர்கள் அம்பிகைபாகனின் சிறப்புப்பற்றி உரையாற்றினர்கள்.

பழைய மாணவர் சங்கச் செயலாளர் திரு ரி. லோகநாதன் நன்றி கூறினார். (ஐ)

## 8 ஆயிரம் ரூபா நிதியுதவி

சாவகச்சேரி, திங்கள்

தமிழகதிகள் புனர் வாழ்வுத்திட்ட நிதிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆசிரியைகள் சுமார் எண்ணுயிரம் ரூபாவை அண்மையில் அன்பளிப்புச் செய்துள்ளனர்.

இந் நிதியைக் கல்லூரி ஆசிரியைகள் சார்பில் கல்லூரிப் பதிலதிபர் திரு கே. கனகசபாபதியிடம் வழங்கினர்.

## குருபூர்ணிமா விழா

யாழ்ப்பாணம், செவ்.

திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள ராம கிருஷ்ணலயத்தில் எதிர்வரும் 21ம் திகதி திங்கள் பிற்பகல் 5-00மணியளவில்குருபூர்ணிமா விழா கொண்டாடப்படவுள்ளது. அன்றையதினம் சுவாமி சித்ரூபானந்தாவின் அருளுரையுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகவுள்ளன. யாழ். பல்கலைக்கழக இந்து கலாசாரத் துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர் 'குருகத்துவம்' என்ற பொருள் பற்றிச் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். ராமகிருஷ்ணலய பகதர்களின் பஜனையும் மற்றும் கும்மியாட்டம நிகழ்ச்சியும் தும்பளை எஸ். அருட்செல்வனின் மிருதங்க கச்சேரியும் நல்லூர் கே குமுதினியின் வயலி இசையும் விழாவில் இடம்பெறும்.

## வருடாந்தஉற்சவம்

மண்டைதீவு, திங்கள்

சொழும்புத்துறை எழிலூர் அன்னைவேளாங்கன்னி மாதா ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 17ம் திகதி ஆரம்பமாகின்றது.

அருட்தந்தை ஸ்ரனிஸ்லாஸ் அடிகள் தலைமையில் 17ம் திகதி நண்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் இவ்வுற்சவம் 20ம் திகதி காலை திருப்பலிபூசை ஆரம்பமாகி அன்னையின் திருச்சொரூப சுற்றுப்பிரகாரத்துடன் நிறைவு பெறுகிறது.

## நியமனம்

புலோலி, திங்கள்

யாழ். கூட்டுறவுத் திணைக்கள தலைமைக்காரியாலய கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராக வடமராட்சி வடக்கு கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எஸ். தணிகாசலம் யாழ். கூட்டுறவுத் திணைக்களத்தினுல் நியமிக்கப்பட்டு பொறுப்பேற்றுள்ளார்.

புலோலி பநோ, கூ. சங்க கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணியாற்றிய திரு. எஸ் சிவராஜா வடமராட்சி வடக்கு கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராகவும் நியமிககப்பட்டுள்ளார்.

## ராஜீவ்...

[3-ம பக்கத் தொடர்ச்சி]

பலதரப்பட்ட விடயங்கள் குறித்து விரிவானபேச்சுவார்த்தைகள் நடத்தப்படும்.

தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்புச் சங்கத்தின் திட்டங்களை மேலும் ஒருங்கிணைத்து உறுதிப்படுத்துவது சம்பந்தப்பட்ட விடயம் இப்பேச்சுக்களில் முக்கிய இடம்பெறும். இந்த சங்கத்துக்கான நிரந்தர செயலகம், அமைவிடம், அதற்கான நிதி பற்றிய விடயங்களும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளதுடன், நவம்பர் மாதத்தில் பெங்களூரில் நடைபெறவுள்ள ஏழு உறுப்பு நாடுகளின் இரண்டாவது உச்சி மகாநாடு பறறியும் இரு தலைவர்களும் கருத்துப் பரிமாறிக் கொள்வார்கள்

இரு தலைவர்களின் இந்த மூன்றுநாள் சந்திப்பின்போது இருதரப்பு உறவு மற்றும் சர்வதேசப் பிரச்னைகள் சமபந்தப்பட்ட விடயங்களும் ஆராயப்படும். (ரா)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

செவ்வாய்க்கிழமை 15-7-86

# "விசேட அதிரடிப்படை, ஊர்காவல் படைகளைக் கலைக்கவேண்டும்!"

## இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி

கொழும்பு, செவ்வாய்
இலங்கை அரசினால் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள மாகாண சபைகளுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென்றும் அதேவேளை விசேட அதிரடிப்படை, ஊர்காவல்படை ஆகியன உடனடியாக கலைக்கப்படவேண்டுமென்றும் இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி அரசை கோரியுள்ளது.

இது சம்பந்தமாக இக்கட்சி விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

ஜனாதிபதிக்கும், ஆளுநர்களுக்கும், முதலமைச்சர்களுக்குமான உறவுகள் நடைமுறைகள் என்பன தெளிவாக வரையறுக்கப்படவேண்டும்.

அத்துடன் ஜனாதிபதி, தனது நிர்வாக நிறைவேற்று அதிகாரங்களை நேரடியாக மாகாண முதல்வர்களுக்கு வழங்கவேண்டும் ஆளுநர் சம்பிரதாய சின்னமாக இருக்கலாம்.

### திருமலை துறைமுகம்

திருமலை துறைமுகம் மத்திய அரசின் நிர்வாகத்தில் இருப்பதில் எமக்கு ஆட்சேபனையில்லை. ஆனால் சிறிய துறைமுகங்கள் - மீன்பிடித் துறைமுகங்கள் என்பன அவ்வவ் மாகாணசபைகளின் நிர்வாகத்தின்கீழ் இருக்கவேண்டும்.

### பல்கலைக்கழகம்

பேராதனை, கொழும்பு, மொரட்டுவ பல்கலைக்கழகங்கள் தேசிய பல்கலைக்கழகங்களாகவும், இவற்றுக்கான மாணவர்கள் திறமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும்.

யாழ், மட்டு, றுகுணு பல்கலைக்கழகங்கள் பிராந்திய தேவைகளை ஈடுசெய்யலாம்.

### குடியேற்றம்

குடியேற்றத் திட்டங்களில் முதலில் அவ்வவ் மாவட்டங்களில் வசிப்போரும், பின்னர் அவ்வவ் மாகாணங்களில் வசிப்போரும் தொடர்ந்து அண்மைய மாகாணங்களில் வசிப்போருக்கும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும.

இறுதியாக அவ்வறிக்கையில் அரசு ஏற்றுக்கொண்டுள்ள யோசனைகளை அமுல்நடத்துவதற்கான சட்டமூலம் இவ்வருடம் ஆவணி மாதத்துக்கு முன்பாராளுமன்றத்தில்சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனவும் ஆலோசனை கூறப்பட்டுள்ளது. [ய-செ]

## பிரதமர் இன்று அமெரிக்கா பயணம்

கொழும்பு, செவ்
பிரதம மந்திரி ஆர். பிரேமதாஸா இன்று அமெரிக்காவுக்குப் பயணமாகிறார்.

மசாசூசெட்ஸ் தொழில் நுட்ப நிறுவனத்தில் இடம் பெறவுள்ள 'சர்வதேச வீடமைப்பு ஆண்டு' தொடர்பான மகாநாட்டை பிரதமர் ஆர். பிரேமதாஸா அங்கு ஆரம்பித்து வைப்பார். [வா]

## இளம் மீனவர் கொலை: நங்கூரத்தில் கட்டப்பட்டு நீரினடியில் சடலம்!

வல்வெட்டித்துறை, செவ்
இன்பருட்டியைச் சேர்ந்த ஜெயதாஸ் என்ற இளம் மீனவர் கடலில் அவரது கட்டுமரத்தில் வைத்து கறுப்புச் சட்டை அணிந்த பாதுகாப்புப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். கூடவிருந்த இம்மீனவரின் மைத்துனர் அக்கட்டுமரத்திலிருந்து நீரில் குதித்து நீந்திவந்து உயிர்தப்பியுள்ளார்.

இச்சம்பவம் இருதினங்களுக்கு முன்னர் வல்வெட்டித்துறைக்கடல் பகுதியில் இடம் பெற்றது.

தப்பி வந்தவரான உதயகுமார் என்ற அவ் இளைஞர் கூறியதாவது:

தாமும் தமது சகோதரியின் கணவரும் மீன்பிடிக்க அதிகாலை 4 மணிக்கு கடலுக்குச் சென்றதாகவும் வலை விரித்துக் கொண்டிருந்தவேளை அருகில் வந்த கடற்படை ரோந்துப்படகிலிருந்த கறுப்புச் சட்டைக்காரர்கள் தன்னை அடித்ததாகவும், பின்னர் தனது மைத்துனரின் நெஞ்சில் துப்பாக்கியால் சுட்டு அவர் கட்டுமரத்தில் விழுந்து கிடக்க தன்னிடம் நீண்ட கூரிய வாளொன்றைத்தந்து அவரை வெட்டும்படி கட்டளையிட்டனராம். அவ்வேளை அவர்கள் எதிர் பாராத விதத்தில் தாம் கடலில் குதித்து பெரும்சிரமங்களுக்கு ஆளாகி நீந்திக்கரை வந்து சேர்ந்ததாகவும் கடற்படையினர் தன்னைப் பிடிப்பதற்காக வெளிச்சம்அடித்துத் தேடினர் என்றும் கூறினார்.

கரைவந்து சேர்ந்த உதயகுமார் மாமனை உதவிக்கு அழைத்துக்கொண்டு சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு மீண்டும் கட்டுமரத்தில்போய் பார்த்த பொழுது, அங்கு வெறும் கட்டுமரம் இரத்தம் தோய்ந்த நிலையில் நின்றதையே கண்டனர்.

பின்னர் அக்கட்டுமரத்தில் ஏறி நங்கூரக்கயிற்றைஇழுத்த பொழுது, இரண்டு பாகமளவுள்ள கயிற்றினால் கால்கள் பிணைக்கப்பட்டநிலையில் தமது மைத்துனரின் உயிரற்ற உடல் நங்கூரத்துடன் மேலே வந்ததைக் கண்டு அதிர்ச்சியுற்றதாகவும் தெரிவித்தார்.

இறந்தவரின் கைகளிலும், கால்களிலும், வெட்டுக்காயங்கள் ஏற்பட்டுள்ளது. இறந்தவர் இருபிள்ளைகளுக்கு தந்தையாவார்.

## சிரமதானத்தில் சீரமைப்பு

கொடிகாமம், செவ்.
கொடிகாமத்தைச் சேர்ந்த வெள்ளாம் போக்கட்டி கொற்புலவு மயானம், வெள்ளாம் போக்கட்டி சனசமூகநிலைய நிர்வாகத்தின்மூலம் சிரமதான அடிப்படையில் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இங்கு இந்து மயானம், கத்தோலிக்க மயானம் என இரு பிரிவாக அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## யோசனைகள்மீது அரசு உறுதியாக இருக்க முடிவு

கொழும்பு, திங்கள்
அரசாங்கம் இனப்பிரச்சினையைத் தீர்க்க தான் சமர்ப்பித்துள்ள யோசனைகளில் உறுதியாக இருக்கப் போவதாக அறிவித்துள்ளது

இதற்கிடையே இலங்கை அரசினால் இந்தியரசிடம் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகளுக்கும் கடந்த மாதம்நடைபெற்ற அரசியல்க் கட்சிகளின் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகட்கும் இடையே வேறுபாடு இல்லையெனவும் மாகாணசபைகளின் ஆளுநருக்கு வழங்கப்படும் நிறைவேற்றதிகாரம் தமிழுக்கும்ஆங்கிலத்துக்கும் வழங்கப்படவுள்ள அந்தஸ்த்து ஆகியவற்றிலேயே தற்போது வேறுபாடுகள் காணப்படுவதாகவும் இவைபற்றி இன்று நடக்கவிருக்கும் அரசியல் கட்சிகளின் மாநாட்டில் ஜனாதிபதி ஜயவர்தன விளக்கமளிப்பாரெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. [ய-செ]

## பெண்ணுக்கு ஆயுள் தண்டனை!

கொழும்பு திங்கள்
ஹெரோயின் போதை வஸ்து வைத்திருந்த குற்றச்சாட்டிற்காக பெண் ஒருவருக்கு கொழும்பு உயர்நீதிமன்றம் இன்று ஆயுள் தண்டனை விதித்தது.

ஹெரோயின் வைத்திருந்ததற்காக கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் இவர் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

போதைவஸ்து வைத்திருந்த குற்றச் சாட்டிற்காக ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட முதலாவது பெண்மணி இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ)

## பொலிகண்டியல் சோதனை

யாழ்ப்பாணம், செவ்.
பொலிகண்டிப்பகுதியிலுள்ள வீடுகள் இராணுவத்தினரால் சோதனையிடப்பட்டதாகத் தெரிகிறது. (ஐ)

## சு. கட்சி அறிக்கை இன்று

கொழும்பு, திங்கள்
இன்று கூடவுள்ள அரசியல் கட்சிகளின் மாநாட்டில் சுதந்திரக் கட்சி ஏன் கலந்து கொள்ளவில்லை என்பதனை விளக்கும் பொருட்டு அக்கட்சி அறிக்கையொன்றினை இன்று வெளியிட்டுள்ளது. (ய.செ)

## தீவுப்பகுதியில் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

யாழ்ப்பாணம், செவ்
இனப்பிரச்னை தீர்வுகுறித்து கொழும்பில் நடைபெறும் அரசியல் கட்சிகளின் மகாநாட்டையும் மாகாணசபைத் தீர்வையும் கண்டித்து ஊர்காவற்றுறை கரம்பனில் ஆர்ப்பாட்ட ஊர்வலம்ஒன்று நேற்று நடாத்தப்பட்டது.

கரம்பன் செபஸ்தியார் கோவிலிலிருந்து நேற்றுக் காலை 10 மணிக்கு இந்த ஊர்வலம் ஆரம்பமானது.

இவ்வூர்வலத்தில் பாடசாலை மாணவ மாணவிகள் உட்பட ஆண்களும் பெண்களும் பெருந்தரளாக கலந்து கொண்டனர். பிரதான வீதி வழியாகச் சென்ற ஊர்வலம் வேலணை மகாவித்தியாலய மைதானத்தில் முடிவடைந்தது.

தமிழீழ விடுதலை அமைப்புகளும் இவ்வூர்வலத்தில் கலந்து கொண்டனர். (மா)

## வல்வெட்டித்---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
பிற்பகல் சுமார் ஒரு மணியளவில் சத்தங்கள் ஓய்ந்தன. இரு இளைஞர்கள் ஹெலிக்காப்டர் ரவை தாக்கியதில் சிறுகாயமடைந்தனர் இம்மோதலில் இராணுவத்தினர்தரப்பில் 6 பேர் பலியாகியும், பலர் படுகாயமடைந்திருக்கலாம் என புலிகளின் அறிக்கை ஒன்று அறிவிக்கிறது.

## சிறுவர் நாடக அரங்கேற்றம்

வசாவிளான், செவ்.
''கர்வம்கொண்ட முயல்'' என்னும் சிறுவர் நாடகம் எதிர்வரும் 19ம் திகதி யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ் அறவழிப் போராட்டக் குழுவினர் நடாத்தும் பாலர் பாடசாலைகளுக்கிடையேயான போட்டிகளில் இந்த நாடகம் முதலாம் இடம் பெற்றதாகும் இந்தச் சிறுவர் நாடகம் கொற்றாவத்தை சமரபாகு அறவழிப் போராட்டக்குழுவின் பாலர் பாடசாலையினால்தயாரிக்கப்பட்டதாகும்.

## ரெஸோ வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செவ்வாய்
தமிழ் — முஸ்லீம் போக்குவரத்து ஒன்றியத்தினரால் நாளை நடத்தப்படவுள்ள ஹர்த்தாலில் அனைத்து மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு தமிழீழ மாணவர் பேரவை [ரெஸ்ஸா] வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

அத்தியாவசிய தேவைகளைச் சீராகப் பெறுவதற்கான வழிமுறைகளை அமைத்துக் கொள்வதற்கான இந்த போராட்டத்தில் கலந்து கொண்டு மாணவர்களும் தங்கள் பங்களிப்பை செலுத்த வேண்டும் என்றும் இந்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

## மரண அறிவித்தல்

### முருகுப்பிள்ளை வரத்துங்கன் உடுப்பிட்டி

14-7-86 'ஈழநாடு' பத்திரிகையில் காலஞ்சென்றதாக அறிவிக்கப்பட்ட அமரர் முருகுப்பிள்ளை வரத்துங்கன் அவர்களின் இறுதி ஆராதனை செவ்வாய்க்கிழமை [15-7-86] இன்றுகாலை 10-00 மணிககு நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம்.

''பரம்'' திருமதி M. இராஜரட்ணம்:
உடுப்பிட்டி. [C-3482]

### திருமதி வேலுப்பிள்ளை தையல்முத்து

ஊர்காவற்றுறை புளியங்கூடலைச் சேர்ந்த வேலுப்பிள்ளை தையல்முத்து அவர்கள் காலமாகிவிட்டார். அன்னார் செல்லத்துரையின் அன்புத் தாயாரும், கங்காலட்சுமியின் மாமியாரும் ஆவார் ஈமக்கிரியைகள் 15-07-86 செவ்வாய் (இன்று மாலை 2 மணிக்கு நடைபெறும். உற்றார், உறவினர் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

(C 3487) வே. செல்லத்துரை

### அ. சூசைப்பிள்ளை (வைத்தியர்)



காலஞ்சென்ற திருமதி அன்னம்மாவின் கணவரும் டாக்டர் லூக்சூசைப்பிள்ளையின் [No.51, Braudles Road Herts Eugland] தகப்பனாரும் ஆகிய அ. சூசைப்பிள்ளை காலமானார். அவரது பூதவுடல் 115, பாங்சால் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள இல்லத்திலிருந்து இன்று 15ம் தேதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு கொஞ்சேஞ்சிமாத சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

115, பாங்சால்வீதி, B. A. பேக்மன்ஸ்
யாழ்ப்பாணம். (C3486)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜூலை மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126